(எபிரே. ௰௧, ௧). அதுகளில் மூன்றுங்காரியமாகிய நம்பிக்கை முக்கியமானது.

௨௩௯. வினா. நமது மாங்கிஷசென்மத்தின்படி நமக்கு விசுவாசமுண்டா.

விடை. இல்லை. ஏனெனில் விசுவாசம் ஒரு வெளிச்சம். நாம் மாங்கிஷசென்மத்தின்படி அந்தகாரமுள்ளவர்களாயிருக்கிறோம் (எபேசி. ௫, ௮).

௨௪௰. வினா. விசுவாசத்தை நம்மில் உண்டுபண்ணுகிறவரார்.

விடை. பரிசுத்தஆவியாகிய பராபரன் தேவவசனத்தைக்கொண்டு நமது இருளை வெளிச்சமாக்கி விசுவாசத்தை நம்மிடத்தில் உண்டுபண்ணுகிறார் (எபேசி. ௨, ௮; ௨ கொரி. ௪, ௰௩).

௨௪௧. வினா. ஒருவன் பராபரனுக்குப்பயந்து நடக்காமல் பாவத்துக்கு ஊழியஞ் செய்துகொண்டுவந்தால் அவனுக்கு மெய்யான விசுவாசமுண்டென்று சொல்லலாமோ.

விடை. சொல்லக்கூடாது. ௧) வெளிச்சமாகிய விசுவாசம் இருளாகிய பாவத்தோடு கூடியிருக்கக்கூடாது (௧ யோவா. ௨, ௮—௰௨; ௨ கொரி. ௬, ௰௪).

௨) விசுவாசத்தைக்கொடுக்கிற பரிசுத்தஆவி அசுத்தமானவர்களிடத்தில் வாசஞ் செய்யமாட்டார் (யோவா. ௰௪, ௰௭).

௩) இயேசுகிறிஸ்து தம்மைச் சிநேகித்துத் தம்மைப் பின்செல்லுகிறவனுக்கல்லாமல் வேறெவனுக்குந் தம்மை வெளிப்படுத்துகிறதில்லை (யோவா. ௰௪, ௨௧-௨௩; ௭, ௰௭).

௨௪௨. வினா. விசுவாசம் மெய்யானதோ பொய்யானதோவென்பதை எப்படியறியலாம்.

விடை. மெய்யான விசுவாசத்திற்கு நாலு அடையாளங்களுண்டு. ௧) அது இருதயத்தைச் சுத்தமாக்கும் (நடபடி ௰௫, ௯; ௨ கொரி. ௭, ௧; எபிரே. ௯, ௰௪; ௧ யோவா. ௩, ௩).

௨) பராபரனையும் பிறத்தியாரையுங் கருத்தாய்ச்சிநேகிக்கிற சிநேகத்தை நமக்குள்ளுண்டாக்கும் (கலா. ௫, ௬; ௧ யோவா. ௪, ௭; ௫. ௧-௩).

௩) சகலகாரியங்களிலும் பராபரனுக்கு நம்மைக்கீழ்ப்படியப்பண்ணும் (யோவா. ௰௫, ௯. ௰; ௧ யோவா. ௨, ௩-௫).

௪) லோகத்தையும் அதிலுள்ள பொல்லாப்புகளையுஞ் செயங்கொள்ளும் (௧ யோவா. ௫, ௪. ௫; எபேசி. ௬, ௰-௰௩).

பராபரனைக்குறித்தது.

௨௪௩. வினா. ஆரை விசுவாசிக்கிறோம்.

விடை. பராபரனை விசுவாசிக்கிறோம். விசுவாசம் முதலாங் கற்பனையின்படி பராபரன் ஒருவருக்கே செய்ய வேண்டிய தேவஆராதனையாம்.

௨௪௪. வினா. பராபரன் தம்முடைய சுபாவமகிமையின்படி எப்படிப்பட்டவர்.

விடை. தற்சுபாவமுள்ளவருஞ் சகல வஸ்துக்களுக்கும் ஆதிகாரணருஞ் சரீரமில்லாதவருங் காணக்கூடாதவரும் ஒப்பிடப்படக்கூடாத ஆவியானவருமாயிருக்கிறார் (யோவா. ௪, ௨௪; ௧ தீமோ. ௬, ௰௫. ௰௬).

௨௪௫. வினா. பராபரன் தம்முடைய பிரதான இலட்சணங்களின்படியே எப்படிப்பட்டவர்.

விடை. ௧) அவர் ஆதியந்தமில்லாதவர். ௨) மாறாதவர். ௩) சர்வத்திற்கும் வல்லவர். ௪) எல்லாவற்றையும் அறிந்தவர். ௫) அளவில்லாத ஞானமுள்ளவர். ௬) எங்கும் நிறைந்தவர். ௭) அளவில்லாத சத்தியமுள்ளவர். ௮) அளவில்லாத பரிசுத்தமுள்ளவர். ௯) அளவில்லாத நீதியுள்ளவர். ௰) அளவில்லாத நன்மையுங் கிருபையுமுள்ளவர்.

௨௪௬. வினா. பராபரன் ஆதியந்தமில்லாதவர் என்கிறதற்கர்த்தம் என்ன.

விடை. அவருக்குத் துவக்கமுமில்லை, முடிவுமில்லை, அவர் காலத்தில் அடங்கினவருமல்லவென்பது தான் அவர் ஆதியந்தமில்லாதவரென்கிறதற்கர்த்தம்.

௨௪௭. வினா. பராபரன் மாறாதவரென்கிறதற்கர்த்தமென்ன.

விடை. பராபரன் தமது சுபாவமகிமையிலாகிலுந் தமக்குண்டான இலட்சணங்களிலென்கிலுஞ் சற்றாகிலும் மாறாமல் ஆதியில் எப்படியிருந்தாரோ அப்படியே என்றென்றைக்குமிருப்பாரென்பது அதின் அர்த்தம் (யாக். ௧, ௰௭; சங்கீ. ௱௨, ௨௬-௨௮).

௨௪௮. வினா. பராபரன் சர்வவல்லவர் என்பதற்கர்த்தமென்ன.

விடை. அவர் அளவில்லாத பெலனுள்ளவராயிருந்து தாம் வேண்டுமென்றிருக்கிற எல்லாவற்றையும் ஒருக்ஷணப்பொழுதில் உண்டாக்கக்கூடியவரென்பதுதான் அவர் சர்வவல்லவரென்பதற்கர்த்தம் (லூக். ௧, ௩௭; சங்கீ. ௱௰௫, ௩; ௱௩௫, ௬; எபேசி. ௩, ௨௰).

௨௪௯. வினு. பராபரன் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறுரென்பதற்கர்த்தமென்ன.

விடை. அவர் முன் நடந்ததும் இப்போது நடக்கிறதும் இனி நடக்கப்போகிறதுமான சகலகாரியங்களையும் மனிதருக்குள் மறைவாயிருக்கிற நினைவுகளையும் இருதயத்தில் கிளம்புகிற ஆசையிச்சைகளையும் ஒன்றுந தப்பாமல் எல்லாவற்றையுந் தெளிவாயறிந்திருக்கிறுரென்பதுதான் அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறுரென்பதற்கர்த்தம் (சங். ௱௩௯, ௧-௪; சங். ௭, ௯; எபிரே. ௪, ௰௩).

௨௫௰. வினு. பராபரன் அளவில்லாத ஞானமுடையவரென்பதற்கர்த்தமென்ன.

விடை. பராபரன் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்து எல்லாவற்றையும் ஆண்டு ஒழுங்காய் நடத்தி தமது ஆலோசனையைக்குறைவற்ற பிரகாரம நிறைவேற்றுகிற மகிமையே அவர் அளவில்லாத ஞானமுடையவரென்பதற்கு அர்த்தம் (எரே. ௰, ௰௨; ரோமர் ௰௧, ௩௩. ௩௪; ஏசா. ௨௮, ௨௯).

௨௫௧. வினு. பராபரன் எங்கும் நிறைந்திருக்கிறுரென்பதற்கர்த்தமென்ன.

விடை. அவர் யாதொரு இடத்திற்குந் தூரமாயிராமலும் யாதொரு ஸ்தலத்தில் அடங்கியிராமலுந தமது சுபாவ மகிமையின்படி, பரலோகத்திலும் பூலோகத்திலும் அவைகளிலுள்ள எல்லா இடங்களிலும் மெய்யாகவே இருந்து கிரியை நடப்பிக்கிற மகிமையே அவர் எங்கும் நிறைந்திருக்கிறுரென்பதற்கு அர்த்தம் (எரே. ௨௩, ௨௩. ௨௪; சங். ௱௩௯, ௭-௰).

௨௫௨. வினு. பராபரன் அளவில்லாத சத்தியமுடையவரென்பதற்கர்த்தமென்ன.

விடை. பராபரன் நீதிமான்களுக்கு நன்மைசெய்யும்படி கொடுத்தவாக்குத்தத்தங்களையும் பாவிகளைத்தண்டிக்கும்படி பயமுறுத்தின ஆக்கினைகளையும் நிச்சயமாக நிறைவேற்றுவாரென்பதே அவர் அளவில்லாத சத்தியமுடையவரென்பதற்கு அர்த்தம் (சங்கீ. ௩௩, ௪; ௧ சாமு. ௰௫, ௨௯).

௨௫௩. வினு. பராபரன் அளவில்லாத பரிசுத்தமுள்ளவரென்பதற்கர்த்தமென்ன.

விடை. பராபரன் தீமையான எல்லாவற்றையும் பகைத்து நன்மையான எல்லாவற்றையுஞ் சிநேகிக்கிறுரென்பதுதான் அவர் அளவில்லாத பரிசுத்தமுள்ளவரென்பதற்கு அர்த்தம் (சங்கீ. ௫, ௫-௭; ௧ பேது. ௧, ௰௫-௰௬).

௨௫௪. வினா. அவர் அளவில்லாத நீதியுள்ளவரென்பதற்கர்த்தமென்ன.

விடை. அவர் தமது சிருஷ்டிகளிடத்தில் காணப்படும் நன்மைகளுக்குத்தக்க பலனை யளித்து அவைகளிடத்தில் காணப்படுகிற பொல்லாப்புக்குத்தக்க ஆக்கினையிடுகிறாரென்கிறது அவர் அளவில்லாத நீதியுள்ளவரென்பதற்கு அர்த்தம் (ரோமர் ௨, ௬. ௭; ௨ தெச. ௧, ௭; சங். ௯௪, ௰௬. ௰௭).

௨௫௫. வினா. பராபரன் அளவில்லாத நன்மையுங் கிருபையுமுள்ளவரென்கிறதற்கர்த்தமென்ன.

விடை. ௧) அவர் தாம் உண்டாக்கின சகல வஸ்துக்களுக்கும் விசேஷமாய்ச் சகல மனிதருக்கும் பொதுவான பற்பல நன்மைகளைச் செய்துகொண்டுவருகிறார் (சங்கீ. ௯௬, ௬-௮).

௨) அவர் மனஸ்தாபப்பட்டு விசுவாசிக்கிறவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் விசேஷித்த கிருபைசெய்து அவர்கள் பாவங்களையெல்லாம் மன்னித்துக் கிறிஸ்து சம்பாதித்த திவ்விய நன்மைகளையெல்லாம் அவர்களுக்குக் கொடுக்கிறாரென்பதுதான் அவர் அளவில்லாத நன்மையுங் கிருபையுமுள்ளவரென்பதற்கு அர்த்தம் (சங்கீ. ௱௩௬, ௧-௨௬; ரோமர் ௨, ௪; எபேசி. ௨, ௭).

௨௫௬. வினா. மேற்சொன்ன தேவ இலட்சணங்களையுடைய பராபரன் ஒருவரா, அநேக தேவர்களுண்டா.

விடை. பராபரன் ஒருவர்தான். அநேக தேவர்களில்லை. பராபரனையல்லாமல மனிதர் தங்கள் புத்தியக்கத்தினால் வணங்கிக்கொண்டுவருகிற தேவர்களெல்லாம பொய்த்தேவர்களொழிய மற்றப்படியல்ல (௧ கொரி. ௮, ௪-௬; ௫ மோசே ௬, ௪; ௧ தீமோ. ௨, ௫; ஏசா. ௪௫, ௫).

௨௫௭. வினா. பராபரன் ஒருவரென்பதை எதினால் ரூபிக்கலாம்.

விடை. தெளிவான வேதவாக்கியங்களைக் கொண்டும் நமது ஞானோபதேசத்தினாலும் ரூபிக்கலாம்.

௧) முதலாங் கற்பனையில் உன் தேவனாகிய கர்த்தர் நாமே நமக்குமுன்பாக உனக்குவேறே தேவனில்லாமற்போவதாகவென்றெழுதியிருக்கிறதொழிய உன் தேவர்களாகிய கர்த்தாக்கள் நாமே என்றெழுதியிருக்கிறதில்லை.

௨) விசுவாசப்பிரமாணத்தில பலதேவர்களை விசுவாசிக்கிறேனென்று சொல்லாமல் பராபரனை விசுவாசிக்கிறேனென்று சொல்லியிருக்கிறது.

௯) கர்த்தருடைய செபத்தில் பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாக்களே என்று சொல்லாமல் எங்கள் பிதாவே என்று சொல்லுகிறோம்.

௨௫௮. வினா. ஒருவராகிய பாரபரனார்.

விடை. பிதா குமாரன் பரிசுத்தஆவியாகிய திரியேகப் பராபரனதான் (மத். ௨௮, ௰௯; ௧ யோவா. ௫, ௭; ௨ கொரிந். ௧, ௨௧. ௨௨; ௰௩, ௰௩; கலாத். ௪, ௬).

௨௫௯. வினா. இம்மூவரும் மூன்று பராபரனோ.

விடை. இம்மூவரும் மூன்று பராபரனல்ல, ஒரே பராபரன. ஆனால் பின்னபேதமில்லாத ஒரே தேவத்துவத்தில் மூன்றாட்களுண்டென்று விசுவாசித்து ஏகதேவத்துவத்திலுள்ள மூன்றாட்களாகிய ஒரே பராபரனைத் திரியேகபபராபரனெனறு சொல்லுகிறோம்.

௨௬௰. வினா. ஒரே பராபரன் திரியேகப் பராபரனாகவுமிருக்கிறாரெனகிற பரம இரகசியத்தை நமது புத்திக்கூர்மையால் ஆராயக்கூடுமா.

விடை. ஆராயக்கூடாது. அது நமது புத்திக்கு மேலான பரம இரகசியமாயிருக்கிறது. பாராபரன தம்முடைய வசனத்தில் இந்தப்பரம இரகசியததை எவ்வளவுவெளிப்படுத்தியிருக்கிறாரோ அவ்வளவுதான் நாம் அறிந்து விசுவாசிக்கவேண்டியது.

௨௬௧. வினா. இந்தப்பரம இரகசியத்தைச்சில உவமானங்களால் தெரிவிக்கக்கூடாதா.

விடை. அதைச்சில உவமானங்களால் தெரிவித்தாலும் அதுகள் குறைவுள்ள உவமானங்களாயிருக்கும். சூரியன் ஒரே சூரியன். அதிலிருந்து வெளிச்சமும் உஷ்டணமும் உண்டாகிறது. இநதமூன்றுகாரியமாகிய சூரியனும் வெளிச்சமும் உஷ்டணமும் பிரிந்திராமல ஒன்றாயிருக்கிறது. நம்முடைய ஆததுமா ஒரே ஆத்துமா. அதில் புத்தியும் மனதுமுண்டு. இந்த மூன்றாட்களையும் மூன்று பராபரனென்று சொல்லாமல் ஒரே பராபானெனறு சொல்லவேண்டியது.

௨௬௨. வினா. தேவத்துவத்திலுள்ள இந்தமூன்று தேவாட்களுக்குமுண்டாயிருக்கிற விததியாசமென்ன.

விடை. பிதா சற்சுபாவமாயிருக்கிறார். குமாரன் பிதாவினுடைய தேவசுபாவத்திலிருந்து அநாதியாய்ப் பிறந்திருக்கிறார். பரிசுத்தஆவி பிதாவிடத்திலுங் குமாரனிடத்திலுமிருநது அநாதியாய்ப் புறப்படுகிறார்.

௨௬௩. வினா. இந்தமூன்று தேவாட்களும் விசேஷித்த எந்தக்கிரியைகளைக்கொண்டு தங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

விடை. பிதா சிருஷ்டிப்பின் கிரியையினாலுங் குமாரன் இரட்சிப்பின் கிரியையினாலும் பரிசுத்தஆவி பரிசுத்தமாக்குகிற கிரியையினாலுந் தங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்தமூன்று கிரியைகளின்படியே விசுவாசப்பிரமாணம் மூன்று பிரிவாய்ப்பிரிக்கப்பட்டிருக்கிறது.

விசுவாசப்பிரமாணத்தின் முதலாம் பிரிவு.

௨௬௪. வினா. விசுவாசப்பிரமாணத்தின் முதற்பிரிவு என்னத்தைப்பற்றியது.

விடை. பிதாவாகிய பராபரன் எல்லாவற்றையுஞ் சிருஷ்டித்த கிரியையைப்பற்றியது.

வினா. முதலாம் பிரிவென்ன.

விடை. பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சருவத்திற்கும்வல்ல பிதாவாகிய பராபரனை விசுவாசிக்கிறேன்.

வினா. இதற்கர்த்தமென்ன.

விடை. பராபரன் என்னையுஞ் சகல வஸ்துக்களையும் உண்டாக்கி எனக்குச்சரீரத்தையும் ஆத்துமாவையுங் கண்காது முதலான சகல அவயவங்களையும் புத்தியையுஞ் சகல இந்திரியங்களையும் அளித்து இற்றைவரைக்குங் காத்து நடத்திவருகிறாரென்று விசுவாசிக்கிறேன். அல்லாமலும் என் சரீரத்திற்குஞ் சீவனுக்கும்வேண்டிய சகல ஆகாரமாகிய அன்னவஸ்திரம் பிழைப்புத்தொழில் பெண்சாதிபிள்ளை வீடுவாசல் ஆடுமாடு நிலமுதலிய சகல ஆஸ்திகளையும் அவர் எனக்குக் கட்டளையிட்டு என்னை அநுதினமும் பரிபூரணமாகப் பராமரித்துச்சகல மோசங்களுக்கும் என்னை மறைத்துச் சகல பொல்லாங்குகளுக்குந் தற்காத்து இரட்சித்துவருகிறாரென்று விசுவாசிக்கிறேன். அவர் இவை எல்லாவற்றையும் பிதாவடைவான கிருபாகடாட்சத்தி

ருலேயுஞ் சுத்தத்தனையினுலேயும் யாதொரு புண்ணி யமும் பாத்திரமுமில்லாத எனக்குச் செய்துகொண்டே வருகிறூர். நானேவென்றல் இவை எல்லாவற்றிற் காகவும் நன்றியறிந்தவனாய் அவரை ஸ்தோத்திரிக்கவும் அவருக்கு ஊழியஞ்செய்து கீழ்ப்படிந்து நடக்கவுங் கடனாளியாயிருக்கிறேன். இது உண்மையானவார்த் தை.

௨௬௫. வினா. இந்த முதலாம் பிரிவு ஆரைப்பற்றியது.

விடை. தேவத்துவத்தில் முதலாம் ஆளாயிருக்கிற பிதாவாகிய பராபரனைப்பற்றியது.

௨௬௬. வினா. அவரைப்பிதாவென்று சொல்லுவானேன்.

விடை. ௧) அவர் தம்முடைய தேவசுபாவத்திலிருந்து ஒரு குமாரனைச்செனிப்பித்தபடியினாலும் (யோவா. ௧, ௰௮).

௨) அவர் கிருபையினால் தமது குமாரன்பேரில் விசு வாசிக்கிற எல்லாருக்கும் பிதாவாயிருக்கிறதினாலும் அவரைப் பிதாவென்று சொல்லுகிறோம் (எபேசி. ௩, ௰௪. ௰௫).

௨௬௭. வினா. பிதாவாகிய பராபரன் வேறொருவரால் உண் டானவரா.

விடை. அவர் வேறொருவரால் உண்டானவரால்ல. அவர் செனிப்பிக்கப்பட்டவரும புறப்படுகிறவருமாயிராமல் தற்சுபாவமாய்ச் சகலவஸ்துக்களுக்கும ஆதிகாரணராயிருக் கிறார்.

௨௬௮. வினா. பிதாவாகிய பராபரனைச் சர்வத்திற்கும் வல் லவரென்று சொல்லுவானேன்.

விடை. எல்லாவற்றையுஞ் சிருஷ்டித்தவர் சர்வத்திற் கும்வல்லவர். எல்லாவற்றையுஞ் சிருஷ்டித்த கிரியை பிதா வின் விசேஷித்த கிரியை. ஆகையால் பிதாவாகிய பராபர னைச் சர்வத்திற்கும்வல்லவரென்று சொல்லுகிறோம்.

௨௬௯. வினா. முதலாந தேவ ஆளாகிய பிதாமாத்திரம் எல் லாவற்றையுஞ் சிருஷ்டித்தவரோ, மற்றதேவாட்களாகிய குமாரனும் பரிசுத்தஆவியும் பிதாவோடுகூட எல்லாவற்றை யுஞ் சிருஷ்டித்தார்களோ.

விடை. பிதாவுக்குங் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக் கும் பின்னபேதமில்லாத ஒரே தேவத்துவமுண்டாயிருக்கிற தால் பிதாவோடுகூட குமாரனும் பரிசுத்தஆவியும் எல்லாவற் றையுஞ் சிருஷ்டித்தார்கள் (சங்கீ. ௩௩, ௬; யோவா. ௧,

௩—௪; கொலோ. ௧, ௰௬. ௰௭). ஆனால் பிதாவாகிய பராபரன் இந்தக்கிரியையினால தம்மை விசேஷித்து வெளிப்படுத்தினார் (௧ கொரி. ௮, ௬).

௨௭௰. வினா. சிருஷ்டிக்கிறதாவதென்ன.

விடை. ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை உண்டு பண்ணுகிறது சிருஷ்டிக்கிறதென்று சொல்லப்படும் (எபி. ௰௧, ௩).

௨௭௧. வினா. பராபரன் என்னத்தைச் சிருஷ்டித்தார்.

விடை. அவர் பரலோகத்தையும் பூலோகத்தையும் அவைகளிலுள்ள சகல வஸ்துக்களையுஞ் சிருஷ்டித்தார். (௧ மோசே ௨, ௧.)

௨௭௨. வினா. பராபரன் எல்லாவற்றையுஞ் சிருஷ்டித்த வரிசை என்ன.

விடை. அவர் ஆறுநாட்களுக்குள் எல்லாவற்றையும் வரிசையாய்ச் சிருஷ்டித்தார். அவர் வானத்தையும ரூபமற்ற பூமியையுஞ் சிருஷ்டித்து முதலாம்நாளில இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கப்பண்ணினார். இரண்டாம்நாளில் ஆகாயவிரிவை உண்டாக்கி அதற்கு மேலாயிருக்கிற தண்ணீர்களுக்கும கீழாயிருக்கிற தண்ணீர்களுக்கும் பிரிவுண்டாக்கினார். மூன்றாம்நாளில் பூமியையுஞ் சமுத்திரத்தையும பிரித்துப் பூமியிலிருந்து பற்பல பயிர்வகைகளையும் விருட்சங்களையும் முளைக்கப்பண்ணினார். நாலாம்நாளில சந்திர சூரியனையுஞ் சகல நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். ஐந்தாம்நாளில சமுத்திரத்தில சஞ்சரிக்கிற பற்பல மச்சங்களையும ஆகாயத்தில பறக்கிற பற்பல பட்சிசாதிகளையுஞ் சிருஷ்டித்தார். ஆறாம்நாளில் பூமியில நடமாடுகிற பற்பல வகையான மிருக செந்துக்களையும் ஊர்வனவற்றையுஞ் சிருஷ்டித்து உண்டாக்கப்பட்ட சகல வஸ்துக்களையும் ஆளும்படி கடைசியாக மனிதனைத் தம்முடைய சாயலில் சிருஷ்டித்தார்.

௨௭௩. வினா. பராபரன் எல்லாவற்றையுஞ் சிருஷ்டித்த முகாந்தரமென்ன.

விடை. அவர் தமக்கு ஒருகாரியந் தேவையாயிருக்குதென்று எண்ணி ஒன்றையுஞ் சிருஷ்டிக்காமல் தமது அளவற்றவல்லமையையும மகிமையையும நன்மையையுங் காண்பிக்கும்படிக்கு எல்லாவற்றையுஞ் சிருஷ்டித்தார்.

௨௭௪. வினா. பராபரன சிருஷ்டித்தவஸ்துக்கள் எத்தனை விதமாயிருக்கிறது.

விடை. காணப்படாத வஸ்துக்களுங் காணப்படுகிற வஸ்துக்களுமென்று இரண்டுவிதமாயிருக்கிறது. காணப்படாதவஸ்துக்களில் தேவதூதர் பிரதான வஸ்துக்கள். காணப்படுகிறவஸ்துக்களில் மனிதர் பிரதானவஸ்துக்கள்.

தேவதூதர்களைப்பற்றியது.

௨௭௫. வினா. தேவதூதர்களின் சுபாவமென்ன.

விடை. கண்டிப்புள்ள சரீரமில்லாத ஆவிகளாயிருக்கிறதே அவர்கள் சுபாவம் (எபி. ௧, ௭. ௰௪; லூக். ௨௪, ௩௭).

௨௭௬. வினா. தேவதூதர்களை உண்டாக்கினவரார்.

விடை. எல்லாவற்றையுமுண்டாக்கின பராபரன் தேவதூதர்களையுமுண்டாக்கினார் (கொலோ. ௧, ௰௬).

௨௭௭. வினா. தேவதூதர்கள் எல்லாரும் ஆதியில் பராபரனால் உண்டாக்கபபட்ட பிரகாரம் இன்னுமிருக்கிறார்களோ, அவர்களுக்குள் யாதொரு பிரிவினையும் மாறுதலுமுண்டாயிற்றோ.

விடை. அவர்களில் சிலர் தாங்கள் உண்டாக்கப்பட்ட பிரகாரம் இன்னம் நல்லவர்களாயிருக்கிறார்கள். சிலர் பாவத்தில் விழுந்து பொல்லாதவர்களாய்ப்போனார்கள். நல்லவர்களாயிருக்கிற தேவதூதர்களைச் சமமனசுக்களென்றும் பொல்லாதவர்களாய்ப் போனவர்களைத் துன்மனசுக்களென்றுஞ் சொல்லுகிறோம்.

௨௭௮. வினா. சம்மனசுக்களின் இலட்சணங்களென்ன.

விடை. அவர்களுக்கு நாலுவித பிரதான இலட்சணங்களுண்டு. ௧) அவர்கள் மிகுந்த ஞானமும் அறிவுமுள்ளவர்கள் (௨ சாமு. ௰௪, ௨௰).

௨) அவர்கள் பரிசுத்தமுள்ளவர்கள் (மத். ௨௫, ௩௧).

௩) அவர்கள் மிகுந்த வல்லமையுள்ளவர்கள் (சங்கீ. ௱௩, ௨௰).

௪) அவர்கள் நன்மையில் உறுதிப்பட்டவர்களாயிருக்கிறார்கள் (மத். ௰௮, ௰).

௨௭௯. வினா. சம்மனசுக்கள் செய்துகொண்டு வருகிற கிரியைகள் எத்தனைவகை.

விடை. இரண்டுவகை. ௧) அவர்கள் பராபரனிடத்தில் செய்கிற கிரியைகளும் ௨) மனிதரிடத்தில் செய்கிற கிரியைகளுமாம்.

௨௱௰. வினா. அவர்கள் பராபரனிடத்தில் செய்கிற பிரதான கிரியைகளென்ன.

விடை. அவர்கள் பராபரனை இடைவிடாமல் தோத்திரித்து அவர் கட்டளையிடும் எல்லாவற்றையுஞ் சந்தோஷத்துடன் செய்து அவருக்குப் பிரியமான ஊழியத்தைச்செய்து கொண்டுவருகிறதுதான் அவர்கள் பராபரனிடத்திற் செய்கிற பிரதான கிரியைகளாம் (ஏசா. ௬, ௨. ௩; தானி. ௭, ௰).

௨௱௧. வினா. அவர்கள் மனிதர்களிடத்திற் செய்கிற கிரியைகளென்ன.

விடை. அவர்கள் எல்லாமனிதருக்கும் விசேஷமாய் பிள்ளைகளுக்குங் காவலாயிருந்து விசுவாசிகளுக்கு ஊழியஞ் செய்கிறார்கள் (சங்கீ. ௯௪, ௭; எபி. ௧, ௰௪; மத். ௰௮, ௰). திருஷ்டாந்தம் (௧ மோசே ௩௨, ௧. ௨; ௨ இரா. ௬, ௰௬. ௰௭; நடபடி ௰௨, ௭—௰).

௨௱௨. வினா. மனிதராகிய நாம் சம்மனசுக்களைப்பற்றிச் செய்யத்தக்கதென்ன.

விடை. ௧) நாம் அவர்களை வணங்கி அவர்களுக்குத் தேவாராதனை செய்யாமல் பராபரன் அவர்களைக்கொண்டு நமக்குச்செய்துவருகிற உபகாரங்களுக்காக அவரைத்தோத்திரிக்கவேண்டியது (அறிவி. ௰௯, ௰).

௨) பாவத்தினால் அவர்களுக்கு மனஸ்தாபம் வருத்துவிக்காமல் குணப்படுகிறதினால் அவர்களுக்குச் சந்தோஷம் வருத்துவிக்கவேண்டியது (லூக. ௰௫, ௰).

௩) சம்மனசுக்களின் காவலால் சூழப்பட்டிருக்கிற சிறுபிள்ளைகளையாகிலும் மற்றவர்களையெனகிலும் அற்பமாய் எண்ணாதபடிக்கு நமமைககாககவேண்டியது (மத். ௰௮, ௰).

௪) அவர்கள் பரிசுத்தமாகிரியையப்பின்பற்றிப் பராபரனுடைய சித்தம் பரமண்டலத்தில் சம்மனசுக்களால் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் நம்மால் செய்யப்பட்டு நாம் அவர்களுடைய கூட்டத்தில் சேரும்படிக்குப் பிரயாசப்படவேண்டியது (மத். ௬, ௰).

௨௱௩. வினா. துன்மனசுக்களின் இலட்சணங்களென்ன.

விடை. மிகுந்த பெலன், புத்தி, உபாயதந்திரம், அகந்தை, அசுத்தம், பொய், கவடு முதலிய அவலட்சணங்கள்தான் அதுகளுக்குண்டாயிருக்கிற இலட்சணங்கள் (லூக். ௰௧, ௨௧. ௨௨; யோவா. ௮, ௪௪; எபேசி. ௬, ௰௧—௰௭).

௨௱௪. வினா. துன்மனசுக்கள் ஆருடைய படைப்பு.

விடை. அதுகள் பராபரனுடைய படைப்பாயிருக்தா லும் அதுகளின் பொல்லாப்பு அவரால் வந்ததல்ல. அது அவர்கள் செய்தபாவக்குற்றத்தினுல் வந்தது. அதுகள் இப் போது செய்கிறதெல்லாம் பொல்லாப்பாயிருக்கிறது. அது கள் நன்மைசெய்யக்கூடாது. ஆனதால் அதுகள் இரட்சிக் கப்படவுங் கூடாது. அதுகள் பராபரனுடைய சாபத்துக் கும் நித்தியமரணத்துக்கும் உட்பட்டிருக்கிறது (யோவா. அ, சச; மத். உரு, சக; யூதா சா-ம் வசனம். உ பேது. உ, ச; அறிவி. உய, ய).

உஅரு. வினு. பிசாசுக்களுக்குத் தலைமையான பிசாசுண் டா.

விடை. உண்டு. அவனுக்குச் சாத்தான் என்று பேர். சாத்தான் என்கிற வார்த்தைக்கு விரோதி அல்லது சத்துரு என்றர்த்தம் (லூக்கா யக, யரு—யஅ).

உஅசா. வினு. பிசாசுக்கள் செய்துகொண்டுவருகிற கிரியை களென்ன.

விடை. க) அதுகள் பராபரனையுஞ் சம்மனசுக்களை யும் மனிதரையும் மிகவும் பகைத்து பராபரனுடைய ஆலோ சனைக்கு எதிர்த்து நிற்கிறதும் மனிதரின் இரட்சிப்புக்குத் தங் களாலானமட்டுந் தடைபண்ணுகிறதும் அதுகள் செய்கிற கிரியைகள் (மத். யஉ, சங—சரு).

உ) விசேஷமாய்ச் சாத்தான் என்கிற தலையானபிசாசு ஆதிமுதல் மனுஷகொலைபாதகனும் பொய்யனுமாயிருந்து எல்லாநன்மையையும் விரோதித்துச் சகல பொல்லாப்புக்கும் காரணமாயிருக்கிறது (மத். யங, ஙஅ. ஙக; யோவா. அ, சச; க யோவா. ங, அ; க பேது. ரு, அ. கூ; அறி. யஉ, ய.

ஆனல் அது பராபரனுடைய சித்தமில்லாமல் ஒருவனை யுஞ் சேதப்படுத்தக்கூடாது (யோபு க, யக. யஉ; உ, ரு. சா; யாக். உ, யகூ; ச, எ).

உஅஎ. வினு. நாங்கள் சம்மனசுக்களைச்செயங்கொள்ளும்படிக் குச் செய்யவேண்டியதென்ன.

விடை. நாம் அதுகளை நமது சத்துருக்களென்று நினைத்து அதுகளின் கற்பனைகளுக்குச்சற்றுவது உட்படாமல் எப்போதும் விழித்திருந்து ஞான ஆயுதங்களைப்பிடித்துக் கொண்டு அதுகளோடு எதிர்த்து நிற்கவேணடும் (க பேது. ரு, அ. கூ; எபேசி. சா, ய-யஅ).

மனிதனைப்பற்றியது.

௨௮௮. வினா. பராபரன் ஆதிமனிதனாகிய ஆதாமை உண்டாக்கின விதமென்ன.

விடை. அவர் ஆதிமனிதனாகிய ஆதாமை மண்ணினால் உண்டாக்கினார். அவனுக்குத் துணையாக ஏவாளை அவன் விலா எலும்பினால் உண்டாக்கினார். இந்த ஆதித்தாய் தகப்பன்மாரிடத்திலிருந்து சகல மனிதரும் பிறக்கும்படி அவர்களை ஆசீர்வதித்தார் (௧ மோசே ௨,௭.௨௧.௨௨; நடபடி௰௭,௨௫.௨௬).

௨௮௯. வினா. பராபரன் மனிதனை என்னத்துக்காக உண்டாக்கினார்.

விடை. ஆண்பெண் இருவராயுந் தமது சாயலாகி உண்டாக்கி அவர்களை இச்சீவனுக்குமாத்திரமல்ல, வருஞ்சீவனுக்காகவும் படைத்தார் (௧ மோசே ௧,௨௬).

௨௯௰. வினா. பராபரனுடைய சாயலாக உண்டாக்கப்பட்ட ஆதிமனிதனின் மகிமை என்ன.

விடை. மனிதன் ஆதியில் ௧) ஞானமுள்ளவனாயிருந்து பராபரனையுந் தான் அறியவேண்டிய எல்லாவற்றையும் இயல்பாயறியத்தக்கவனாயிருந்தான் (கொலோ. ௩, ௰).

௨) அவன் பரிசுத்தமும் நீதியுமுள்ளவனாயிருந்து பராபரனுடைய சித்தத்தின்படிசெய்யச் சித்தமும் பெலனுமுள்ளவனாயிருந்தான (எபேசி. ௪, ௨௩).

௩) அவன் பாக்கியமுள்ளவனாய் வாழ்ந்து இந்த லோகத்தை ஆண்டுகொண்டிருந்தான் (௧ மோசே௧,௨௮). தேவசாயலாக உண்டாக்கப்பட்ட ஆதிமனிதனின் மகிமை இதுதான்.

௨௯௧. வினா. ஆதிமனிதனுக்குண்டாயிருந்த தேவசாயல் மனிதராகிய நமக்கு இன்னம் உண்டாயிருக்கிறதா, அதை இழந்துபோனோமா.

விடை. அதை இழந்துபோனோம். ஏனெனில் ஆதித்தாய்தகப்பனமார் பிசாசினால் ஏவப்பட்டுச்செய்த பாவத்தினிமித்தஞ் சுபாவமாகப்பிறந்த அவர்கள் சந்ததியாராகிய எல்லாமனிதருந் தேவசாயலை இழந்துபோய் மரணத்திற்கும் பிசாசின அடிமைத்தனத்திற்கும் உள்ளான பாவிகளாகப்பிறந்திருக்கிறார்கள் (௧ மோசே ௨, ௰௭; ௫, ௩; சங்கீ. ௫௧, ௬; யோவா. ௩, ௩; எபிரே. ௨, ௰௪. ௰௫).

௨௯௨. வினா. பாவத்தினால் நமக்குப்பலித்த பிசாசின் சாயலென்ன.

விடை. துர்க்குணந் துர்ப்புத்தி ஆகாதஇச்சை அகந்தை பெருமை பொய் கபடு மாயங் கோபம் பகை வற்மம் அசுத்தம் அநியாயமுதலிய சகல வகையான பாவங்களுந்தான்.

௨௱௩. வினா. நாம் இழந்துபோன தேவசாயலில் இன்னங் கொஞ்சம் நமக்குண்டாயிருக்கிறதா, அல்லது அதை முழுவதும் இழந்துபோனோமா.

விடை. அதை முழுவதும இழந்துபோனோம். ஆனாலும் ௧) பராபரன் உண்டென்றும் அவர் இன்னாரென்றும் அறியும்படிக்கான கொஞ்சவெளிச்சமும் (ரோமர் ௧, ௰௮. ௰௯),

௨) இது நன்மை அது தீமை என்று அறிகிற மனச்சாட்சியுஞ் சுபாவமாய் எல்லாருக்கும் உண்டாயிருக்கிறது (ரோம. ௨, ௰௫).

௨௱௪. வினா. நாம் இழந்துபோன தேவசாயலைத் திரும்ப அடையலாமோ.

விடை. அதைத்திரும்ப அடையலாம். ஏனென்றால் பிசாசின் கிரியைகளைக் குலைக்கவே பராபரனுடைய குமாரன் வெளிப்பட்டபடியினாலும் தேவசாயலை நம்மிடத்தில் திரும்ப புதுப்பிக்கும்படிக்கு இயேசுகிறிஸ்து இந்தலோகத்திலே வந்துபாடுபட்டு மரித்தபடியினாலும் அவரை விசுவாசிக்கிறவர்கள் இழந்துபோன தேவசாயலைத் திரும்ப அடைகிறார்கள். மறுமையில் அது நிறைவாகுமாகும் (௨ பேது. ௧, ௩. ௪; ௨ கொரி. ௩, ௰௮; ௧ யோவா. ௩, ௨).

பராமரிப்பைப்பற்றியது.

௨௱௫. வினா. பராபரன் எல்லாவற்றையுஞ் செய்து முடித்தபிறபாடு ஒன்றையுஞ் செய்கிறதில்லையா.

விடை. செய்கிறார். தாம் உண்டாக்கின வஸ்துக்களைப் பராமரிக்கிறார். அவர் அவைகளை ஒரு கணப்பொழுது கைவிட்டால எல்லாம் நிர்மூலமாய்ப்போகும். அவைகளைக் கைவிடாமல் பராமரிக்கிற கிரியை அனாருடகச்சிருஷ்டிப்பைப்போலிருக்கிறது (யோவா. ௫, ௰௭).

௨௱௬. வினா. பராபரன் எல்லாவற்றையும் பராமரிக்கிற கிரியை எத்தனை விதம்.

விடை. மூன்றுவிதம். ௧) அவர் தாம் உண்டாக்கின எல்லாவஸ்துக்களையுங் காப்பாற்றுகிறார் (எபி. ௧, ௩; சங்கீ. ௱௪, ௰௩, ௰௪; ௱௪௫, ௰௫. ௰௬; மத். ௬, ௨௬ - ௩௨).

௨) அவர் லோகத்தில் எல்லாவற்றையும் நடப்பித்துத் தமது கிரியையைச்செய்கிறார் (சங்கீ. ௱௩௫, ௬; எசா. ௪௫, ௬. ௭; தானி. ௪, ௨௨; ௫, ௨௧; நடபடி ௰௭, ௨௬; எபேசி. ௧, ௰).

௩) அவர் எல்லாக்காரியங்களையுந் தம்முடைய சித்தத்துக்குச்சரியாக ஆண்டுகொள்ளுகிறார் (சங்கீ. ௬௬, ௫ ௭; நடபடி ௰௭, ௨௬; மத். ௰, ௨௯. ௩௰).

௨௯௭. வினா. இந்த லோகத்தில் அநேகம் பொல்லாப்புகள் நடந்துவருகிறதே. எல்லாவற்றையும் நடத்துகிற பராபரன் இப்படிக்கொத்த பொல்லாப்புக்குக் காரணரென்று சொல்லலாமா.

விடை. சொல்லக்கூடாது. ஏனென்றால் ௧) சகல நன்மைக்குங் காரணராகிய பராபரன் பொல்லாப்பை உண்டாக்காமலும் நடப்பிக்காமலும் அதற்குச்சம்மதியாமலும் பொல்லாப்பான எல்லாவற்றையும் அருவருத்து அதைச்செய்யாதபடிக்கு அநேக கற்பனைகளைக்கொடுத்து அவைகளினால் நம்மைத்தடுத்துக்கொண்டுவருகிறார் (௧ மோசே ௧, ௩௧; சங்கீ. ௫, ௫—௭).

௨) நடக்கிற பொல்லாப்புக்கு அவர் நியாயமான முகாந்தரங்களை முன்னிட்டு இடங்கொடுத்து அது பொல்லாதவர்களுக்கு ஆக்கினையாகப்பலிக்கவும் நல்லவர்களுக்கு நன்மையாக முடியவுஞ் செய்து சகல பொல்லாப்புக்கும் ஒரு முடிவைக்குறித்துக் கடைசியில் அதற்குத்தக்கதாக ஆக்கினையிடுகிறார் (௧ மோசே ௫௰, ௨௰; நடபடி ௪, ௨௭ ௨௮).

௨௯௮. வினா. பராபரன் மனிதராகிய நம்மை விசேஷமாய்ப் பராமரிக்கிற விதமென்ன.

விடை. ௧) பராபரன் நமக்குச்சரீரத்தையும் ஆத்துமாவையுங் கண்காது முதலான சகல அவயவங்களையும் பக்தியையுஞ் சகல இந்திரியங்களையும் அளித்து அதுகளைக் காத்து நடத்திவருகிறார் (யோபு ௰, ௰௨; நடபடி ௰௭, ௨௪. ௨௫).

௨) நம்முடைய சரீரத்துக்குஞ் சீவனுக்கும் வேண்டிய ஆகாரமாகிய அன்னவஸ்திரம் பிழைப்பு தொழில் பெண்சாதி பிள்ளை வீடுவாசல் ஆடுமாடு நிலமுதலிய சகல ஆஸ்திகளையும் அவர் நமக்குக்கட்டளையிட்டு வருகிறார் (௧ மோசே ௮, ௨௨; சங்கீ. ௱௪௫, ௰௫; நடபடி ௰௪, ௰௭).

௩) சகல மோசங்களுக்கும் நம்மை மறைத்துச்சகல பொல்லாங்குகளுக்குந் தற்காத்து இரட்சித்துவருகிறார் (சங். ௱௨௧, ௩—௬; ௯௧).

௪) தம்முடையவர்களுக்குச் சுகமுந் துன்பமுமாய் நடக்கிற எல்லாவற்றையும் அவர்களுக்கு நன்மையும் நித்திய இரட்சிப்புமாகப் பலிக்கப்பண்ணுகிறார். ஆனால் பராபரனுடைய தயையையறியாமல் போகிறவர்கள் அவருடைய கோபத்திற்கு உள்ளாவார்கள் (வாக். ௨,௭. ௮; ரோமர் ௮, ௨௮; எபிரே. ௰௨, ௫-௭; ரோமர் ௨, ௪. ௫).

௨௯௯. வின. பராபரன் எந்த முகாந்தரத்தினால் நமக்கு அநுதினமும் அத்தனை உபகாரங்களைச்செய்துகொண்டுவருகிறார்.

விடை. அவர் இவை எல்லாவற்றையும் பிதாவுடைவான கிருபாகடாட்சத்தினாலேயுஞ் சுத்ததயையினாலேயும் யாதொரு புண்ணியமும் பாத்திரமுமில்லாத நமக்குச்செய்துகொண்டுவருகிறார் (௧ மோசே ௩௨, ௰; ரோமர் ௰௧, ௩௫).

௩௱. வின. நாம் இவை எல்லாவற்றிற்காகவும் பராபரனுக்குச்செய்யவேண்டியதென்ன.

விடை. ௧) நாம் இவை எல்லாவற்றிற்காகவும் நன்றியறிந்தவர்களாய் அவரை ஸ்தோத்திரிக்கவும் அவருக்கு ஊழியஞ்செய்து கீழ்ப்படிந்து நடக்கவுங் கடனாளிகளாயிருக்கிறோம் (சங்கீ. ௱௩, ௨; ௱௰௮, ௧; ௧ சாமு. ௰௫, ௨௨).

௨) விசேஷமாய் அவர் நமக்கு அனுப்புகிற துன்பங்களிலுஞ் சோதனைகளிலும் அவர்பேரில் நம்பிக்கையாயிருந்து அவரை ஸ்தோத்திரிக்கவும் நமமுடைய துக்கக்கவலைகளையெல்லாம் அவர்பேரில் எறிந்துவிட்டு அவருக்குக்கீழ்ப்படிந்து நடக்கவும்வேண்டும் (ரோமர் ௫, ௩—௫; யாக. ௧, ௰௨; மத். ௬, ௨௫; ௧ பேது. ௫, ௭).

௩௱௧. வின. பராபரன் எல்லாவற்றையுஞ் சிருஷ்டித்துப் பராமரிக்கிற ஞானோபதேசம் விசுவாசப்பிரமாணத்தின் முதலாம் பிரிவில் அடங்கியிருக்கிறதே நாம் இதை மெய்யாகவே விசுவாசிக்கிறோமென்கிறதற்கு அடையாளமென்ன.

விடை. நாஞ் சகல காரியங்களிலும் நம்மை உண்டாக்கினவரின் பராமரிப்பை நம்பி அவர் நம்மை நடத்தும் விதத்துக்குச் சந்தோஷப்பட்டு அவர் நமக்குக்கொடுத்துக்கொண்டு வருகிற எல்லாவற்றையும் அவருக்கு ஸ்தோத்திரமுண்டாக அநுபவிக்கிறதுதான் அதற்கு அடையாளம்.

விசுவாசப்பிரமாணத்தின் இரண்டாம் பிரிவு.

௩௱௨. வின. விசுவாசப்பிரமாணத்தின் இரண்டாம் பிரிவு என்னத்தைப்பற்றியது.

விடை. குமாரனாகிய பராபரன் நம்மை மீட்டிரட்சித்த கிரியையைப்பற்றியது.

வினா. இரண்டாம் பிரிவென்ன.

விடை. அவருடைய ஒன்றான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறேன். இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாக உற்பவித்துக் கன்னிமரியாளிடத்தினின்றுபிறந்து பொந்தியுபிலாத்து என்கிறவன் கீழ்ப்பாடுபட்டுச் சிலுவையிலறையுண்டு மரித்தடக்கப்பட்டார். பாதாளங்களிலிறங்கி மூன்றாம்நாள் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தருளினார். பரமண்டலங்களுக்கேறிச் சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனுடைய வலதுபாரிசத்திலிருக்கிறார். அவ்விடத்திலிருந்து சீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்கவருவார்.

வினா. இதற்கர்த்தமென்ன.

விடை. பிதாவினிடத்தில் அநாதியாய்ப்பிறந்த மெய்யான தேவனுங் கன்னிமரியாளிடத்தில் பிறந்த மெய்யான மனிதனுமாயிருக்கிற இயேசுகிறிஸ்து என் கர்த்தரென்று விசுவாசிக்கிறேன். ஏனென்றால் கெட்டுப்போய்ச்சபிக்கப்பட்ட என்னை அவர் பொன்னினாலுமல்ல வெள்ளியினாலுமல்ல, விலைமதிக்ககூடாத தமது பரிசுத்த இரத்தத்தினாலுங் குற்றமில்லாமற் பட்டபாடுகளினாலும் மரணத்தினாலும் எல்லாப்பாவங்களிலும் மரணத்திலும் பிசாசினுடைய வல்லமையிலுமிருந்து மீட்டிரட்சித்துத் தமக்குச் சம்பாதித்துக் கொண்டார். அதினால் நான் அவருக்குச்சொந்தமாயிருந்து அவருக்குக் கீழாக அவருடைய இராச்சியத்தில் பிழைத்து நித்திய நீதியிலுங் கவடற்ற உண்மையிலும் மோட்சானந்தத்திலும் அவருக்கு ஊழியஞ்செய்வதற்கு அவர் மரணத்திலிருந்தெழுந்து என்றென்றைக்கும் பிழைத்து ஆண்டுகொண்டிருக்கிறார். இது உண்மையானவார்த்தை.

இயேசுகிறிஸ்து மெய்யான பராபரனும் மெய்யான மனிதனுமாயிருக்கிறாரென்பதைக்குறித்தது.

௱௩. வினா. இயேசுகிறிஸ்து ஆர்.

விடை. அவர் மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமாயிருக்கிற பராபரனுடைய குமாரன்தான்.

௱௪. வினா. இவர் மெய்யான தேவன் என்கிற சத்தியத்தை எதினால் ரூபிக்கலாம்.

விடை. ௧) வேதத்தில் அவருக்குக்கொடுக்கப்பட்டிருக்கிற தேவநாமங்களாலும் (௧ யோவா. ௫, ௨௰; நடபடி ௨௰, ௨௮; யோவா. ௧, ௧—௩; ௨௰, ௨௮; ரோமர் ௯, ௫),

௨) பழைய ஏற்பாட்டில் பராபரனைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறதுகள் கிறிஸ்துவைப்பற்றியதென்று புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறதினாலும் (௪ மோசே ௨௧, ௫. ௬; ௧ கொரி. ௰, ௯;-ஏசா. ௬; யோவா. ௰௨, ௪௰. ௪௧;- சங்கீ. ௬௮; எபேசி. ௪, ௮;- சங்கீ. ௪௫, ௭; எபிரே. ௧, ௮. ௯;- சங்கீ. ௯௭, ௭; எபிரே. ௧, ௬),

௩) அவர் பிதாவின் சுபாவத்தினின்று அநாதியாய்ப் பிறந்திருக்கிறதினாலும் (சங்கீ. ௨, ௭; மீகா. ௫, ௧; எபி. ௧, ௩; யோவா. ௰௪, ௰௯; ௩, ௰௬),

௪) அவருக்குண்டாயிருக்கிற தேவ இலட்சணங்களாலும். அவர் அநாதியாயிருக்கிறார் (யோவா. ௧, ௧. ௰௫; ௬, ௫௮; ௰௭, ௫); அவர் சர்வத்துக்கும் வல்லவர் (மத். ௨௮, ௰௮; யோவா. ௰, ௨௮. பிலிப். ௩, ௨௧); அவர் எல்லாவற்றையும் அறிந்தவர் (யோவா. ௨, ௨௪); அவர் எங்கும் நிறைந்தவர் (மத். ௨௮, ௨௰).

௫) அவர் நடப்பித்த தேவ கிரியைகளினாலும் (யோவா. ௧, ௩; கொலோ. ௧, ௰௬. ௰௭; யோவா. ௫, ௰௭; ௨௰, ௩௰. ௩௧),

௬) அவருக்குச் செய்யவேண்டிய தேவ ஆராதனையினாலும் அவர் மெய்யான தேவனென்பதை ரூபிக்கலாம் (யோவா. ௫, ௨௩; ௰௪, ௰௧; பிலிப். ௨, ௰).

௱௫. வினா. இயேசுகிறிஸ்து மெய்யான பராபரனாக நம்மை இரட்சித்தாரா.

விடை. ஆம், இரட்சித்தார் (நடபடி ௨௰, ௨௮).

௱௬. வினா. இயேசுகிறிஸ்து மெய்யான தேவனென்கிற

சத்தியத்தை அறிந்து விசுவாசிக்கிற நாஞ் செய்யவேண்டிய தென்ன.

விடை. ௧) நாம் இயேசுகிறிஸ்துவை மெய்யான தேவனாகவணங்கி அவருக்குத்தக்க தேவாராதனை செய்யவேண்டும்.

௨) அவர் போதித்த உபதேசங்களைத் தேவஉபதேசங்களாகவும் அவர் நம்மை மீட்டிரட்சித்த கிரியையைத் தேவகிரியையாகவும் ஏற்றுக்கொண்டு மோட்சத்தின் நம்பிக்கையை அவர்பேரில் வைத்து எல்லாவற்றிலும் அவர் சித்தத்தின்படி நடக்கவேண்டும்.

௱௭. வினா. இந்த உபதேசத்தினால் நமக்குவருகிற ஆறுதலென்ன.

விடை. ௧) பராபரனுடைய குமாரன் மெய்யான தேவனாகச் சம்பாதித்த இரட்சிப்பு பரிபூரணமானதென்றும்,

௨) சகல சத்துருக்களுக்கும் விலக்கி நம்மைக்காக்கவும் நமக்குவேண்டியதெல்லாவற்றையும் எப்போதுங் கொடுக்கவும் அவருக்கு வல்லமை உண்டென்றும் இந்த உபதேசத்தினால் ஆறுதலாக அறிந்திருக்கிறோம்.

௱௮. வினா. மெய்யான பராபரனாகிய இயேசுகிறிஸ்து மெய்யான மனிதனுமாயிருக்கிறாரோ.

விடை. ஆம், அவர் மெய்யான மனிதனாக மனிதசுபாவத்தை எடுத்துக்கொண்டு சரீரமும் ஆத்துமமுமுள்ள ஒரு மனிதனாக இப்பூலோகத்தில் பிறந்தார். ஆனபடியால் அவருக்கு இரண்டு சுபாவங்களுண்டு. தேவசுபாவமொன்றும் மனித சுபாவமொன்றுந்தான் (யோவா.௧,௰௪; கலாத.௪, ௫).

௱௯. வினா. அவர் இந்தபூலோகத்தில் மனிதனாகப்பிறந்த முகாந்தரமென்ன.

விடை. பாவத்தினால் கெட்டுப்போன மனிதர் எல்லாரையும் மீட்டிரட்சிக்கும்படிக்கு அவர்மனிதனாக இந்தப்பூலோகத்தில் பிறந்தார் (எபிரே. ௨, ௰௪. ௰௫).

௱௰. வினா. அவர் ஆராலே கர்ப்பமாக உற்பவித்தார்.

விடை. பரிசுத்தஆவியினாலே கர்ப்பமாக உற்பவித்துப் பாவமில்லாமல் பரிசுத்தமுள்ளவராகப் பிறந்தார் (லூக். ௧, ௩௫).

௱௰௧. வினா. அவர் எப்போது மனிதனாகப் பிறந்தார்.

விடை. பிதாவாகிய பராபரன் குறித்தகாலம் நிறைவேறினபோது அவர் மனிதனாகப் பிறந்தார் (கலா. ௪, ௫)

௱௰௨. வினா. அவர் எங்கே பிறந்தார்.

விடை. யூதேயா தேசத்திலிருக்கிற பெத்லகேம் என்கிற ஊரில் பிறந்தார் (லூக். ௨, ௪. ௬. ௭; மீகா. ௫, ௨).

௱௰௩. வினா. அவர் ஆரிடத்தினின்று பிறந்தார்.

விடை. தாவீதின் குடும்பத்தாளாகிய கன்னிமரியாளிடத்தினின்று பிறந்தார் (௨ சாமு. ௭, ௰௨; ஏசா. ௭, ௰௪).

௱௰௪. வினா. மனித சுபாவத்தின்படி அவருடைய தகப்பனார்.

விடை. தேவசுபாவத்தின்படி அவருக்குத் தாய் இல்லாததுபோல் மனித சுபாவத்தின்படி அவருக்குத் தகப்பனுமில்லை. ஆனால் அவரை வளர்த்த தகப்பன் தாவீதின் வீட்டானாகிய யோசேப்பு தான்.

௱௰௫. வினா. குமாரனாகிய பராபரனாயிருக்கிற இயேசு கிறிஸ்து தமது மனித சுபாவத்தை எடுத்துக்கொண்டபோது மனித சுபாவத்திற்கடுத்த பெலவீனங்களுக்கும் உள்ளானாரோ.

விடை. ஆம். அவர் நமக்காகப் பாடுபடவேண்டிய முகாந்தரத்தை முன்னிட்டு மனித சுபாவத்திற்கடுத்த பாவமில்லாத பெலவீனங்களுக்குள்ளானார் (எபிரே. ௨, ௰௭. ௰௮; ௪, ௰௫; யோவா. ௮, ௪௬).

௱௰௬. வினா. மெய்யான பராபரனாகிய இயேசு கிறிஸ்து மெய்யான மனிதனுமாரென்கிற சத்தியத்தையறிந்து விசுவாசிக்கிற நாஞ் செய்யவேண்டியதென்ன.

விடை. ௧) அவர் நம்மை மீட்டிரட்சிக்கும்படிக்கு மெய்யான மனிதனான சொல்லிமுடியாத உபகாரத்துக்காகத் திரியேகப் பராபரனை முழுமனதாலுந் தோத்திரிக்கவேண்டும் (௧ தீமோ. ௩, ௰௬).

௨) அவர் தம்முடைய தேவ சுபாவத்தோடு சேர்த்துக் கொண்ட நம்முடைய மனித சுபாவத்தைப் பாவங்களினால் அசுத்தப்படுத்தாமலிருக்கவேண்டும் (௧ கொரி. ௬, ௰௩).

௩) அவர் மனித அவதாரம்பண்ணினதினால் நாந் தேவகுணத்துக்குப் பங்குள்ளவர்களாகும்படிக்குப் பிரயாசப்படவேண்டும் (௨ பேது. ௧, ௩. ௪).

௱௰௭. வினா. இந்த உபதேசத்தினால் நமக்கு வரும் ஆறுதலென்ன.

விடை. ௧) அவர் மெய்யான மனிதனானதினால் நமது சகோதரனானாரென்றும் (எபிரே. ௨, ௰௧),

௨) அவர் நம்முடைய சகோதரனாக நமதுபேரில் இரக்கமுந் தயவுமாயிருக்கிறாரென்றும் (எபி. ௨, ௰௭. ௰௮; ௪, ௰௫),

௩) அவர் நமது கிருபாசனமாயிருப்பதால் நாம் இரக்

கதையைப் பெற அவரண்டையில் தைரியமாய்ச் சேரலாமென்றும் (எபிரே. ச, ௰சு),

ச) தம்முடைய சுதந்தரத்துக்கு நம்மைப் பங்காளிகளாக்குவாரென்றும் ஆறுதலாக அறிந்திருக்கிறோம் (ரோமர் அ, ௰எ).

௬௱௰அ. வினா. இயேசு கிறிஸ்து மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமாயிருக்கவேண்டியது அவசியமா.

விடை. ஆம், லோகத்தின் இரட்சிப்புக்கு அது அவசியம் வேண்டியது.

க) அவர் மனிதனாயிராமல் பராபரனுடைய குமாரனுமாத்திரமிருந்தால் பாடுபடக்கூடாது (எபி. உ,௰ச.௰ரு).

உ) அவர் மெய்யான பராபரனாயிராமல் மெய்யான மனிதனுமாத்திரமிருந்தால் எவ்வளவு பாடுபட்டாலும் ஒரு மனிதனையும் இரட்சிக்கக்கூடாது (எபிரே. உ, ௰சு. ௰எ; சங்கீ. சம, அ. க).

௬௱௰௯. வினா. கிறிஸ்துவின் தேவசுபாவமும் மனிதசுபாவமும் பிரிந்திருக்குதோ, ஒன்றாயிருக்குதோ.

விடை. இந்த இரண்டு சுபாவமுங் கிறிஸ்துவினிடத்தில் சற்றேனும் பிரிந்திராமல் ஒரேகட்டாய் ஒன்றித்திருக்கிறதினால் அவர் மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமாகிய ஒருவராயிருக்கிறாரென்று சத்தியவேதத்தின்படி சொல்லுகிறோம் (க தீமோ. உ, ரு; க கொரிந், அ,, சு).

௬௱உ௰. வினா. கிறிஸ்துவினிடத்தில் தேவ சுபாவமும் மனித சுபாவமும் ஒன்றாயிருக்கிறவகையென்ன.

விடை. அது நம்முடைய புத்திக்குமேலான இரகசியமாயிருக்கிறது. ஆனால் ஒரு மனிதனிடத்தில் ஆத்துமமுஞ் சரீரமும் எப்படி ஒன்றித்திருக்கிறதோ அப்படி இயேசு கிறிஸ்துவினிடத்தில் தேவ சுபாவமும் மனித சுபாவமும் ஒன்றித்திருக்கிறது.

இயேசு கிறிஸ்துவென்கிற நாமத்தைப் பற்றியது.

௬௱உ௰க. வினா. மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமானவரின நாமமென்ன.

விடை. இயேசு கிறிஸ்து.

௬௱உ௰உ. வினா. இயேசுவென்கிற நாமத்திற்கர்த்தமென்ன.

விடை. எபிரேய பாஷையின் சொல்லாகிய இந்த

நாமத்திற்கு இரட்சகர் என்கிற அர்த்தமாம் (மத். ௧, ௨௧).

௯௨௩. வினா. இயேசுவென்கிற நாமத்தை அவருக்குக்கொடுத்தவரார்.

விடை. ௧) பராபரன் தாமே காபிரியேல் என்கிற தேவதூதனைக்கொண்டு கன்னிமரியாளுக்கும் (லூக். ௧, ௩௧), ௨) பிற்பாடு சொப்பனத்தில் தரிசனையான ஒரு தூதனைக் கொண்டு யோசேப்புக்கும் அவருக்கு இயேசு வென்னும் பெயரிடக் கட்டளையிட்டார் (மத். ௧, ௨௪. ௨௫). அவர் சுன்னத்துப்பண்ணப்பட்டபோது அவருக்கு இயேசுவென்கிறநாமம் இடப்பட்டது (லூக். ௨, ௨௧).

௯௨௪. வினா. இயேசுவென்கிற நாமத்தைச் சொல்லுகிறபோதுங் கேட்கிறபோதும் நாம் நினைக்கவேண்டியதென்ன.

விடை. அவர் இந்த நாமத்தின்படியே மெய்யாகவே நம்மை இரட்சித்திருக்கிறாரென்றும் அவரிடத்தில் ஈடேற்றமும மோட்சமும் மெய்யாகவே நமக்கு அகப்படுமென்றும் நினைக்கவேண்டும்.

௯௨௫. வினா. இயேசு கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கையிடும்போது செய்யவேண்டியதென்ன.

விடை. தலை குனிந்து மிகுந்த ஆசாரத்தோடு அதைச் சொல்லுவது நன்மை (பிலிப். ௨, ௰).

௯௨௬. வினா. கிறிஸதுவெனகிற நாமத்திற்கர்த்தமென்ன.

விடை. கிரேக்கப்பாஷையின் சொல்லாகிய இநத நாமததின் அாத்தம் அபிஷேகம்பணணபபட்டவரென்பதாம். எபிரேய பாஷையின்சொலலாகிய மேசியா என்பதற்கும் இந்த அர்த்தமுண்டு.

௯௨௭. வினா. அவர் என்னத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்.

விடை. பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார் (சங். ௪௫, ௭; நடபடி ௰, ௩௭).

௯௨௮. வினா. அவர் எனனத்திற்காக அபிஷேகம்பண்ணபபட்டார்.

விடை. அவர் தீர்க்கதரிசி தொழிலுக்கும் பிரதான ஆசாரியனுடைய தொழிலுக்கும் இராசாவினுடைய தொழிலுக்கும் அபிஷேகம் பண்ணப்பட்டார்.

இயேசு கிறிஸ்துவினுடைய மூன்று தொழில்களைக் குறித்தது.

௯௨௯. வினா. இயேசுகிறிஸ்து தீர்க்கதரிசியாயிருக்கிறாரோ.

விடை. ஆம், அவர் நம்முடைய நாசகதாரியாயி ருக்கிருர்.

கூகூய. விஞ. முற்காலத்திலிருந்த தீர்க்கதரிசிகளின் தொழிலென்ன.

விடை. அவர்கள் பராபரனுடைய தானுபதிகளாகச் சனங்களுக்குப் பராபரனுடைய சித்தத்தை அறிவித்து அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தைப் போதித்து வரப்போகிற இரட்சகனையும் இரட்சிப்பையும் மற்றுங் காரியங்களையும் முன்னறிவித்தார்கள்.

கூகூக. விஞ. இயேசு கிறிஸ்து நம்முடைய தீர்க்கதரிசியாகச் செய்ததென்ன.

விடை. அவர் லோகத்தில் சஞ்சரித்த காலத்தில் பரமண்டலங்களிலிருக்கிற தமது பிதாவின் சித்தத்தை மனிதருக்குத் தெரிவித்து (யோவா. க, யஅ; யஉ, சக. ருப), தாம் நிறைவேற்றின நியாயப்பிரமாணத்தையும் (மத். ரு; யஎ), தாம் உண்டுபண்ணின இரட்சிப்பையும் (ஏசா. ருச, ச-ங; லூக். ச, யஅ—உக; மத். யக, ரு) பற்றிப்போதித்து, இரட்சிப்பின் நிறைவேறுதலாகிய வருங்காரியங்களை முன்னறிவித்தார் (மத். உச, உரு; அறிவி. க, க).

கூகூஉ. விஞ. அவர் தீர்க்கதரிசனத்தொழிலை இப்போது எப்படிச் செய்துகொண்டு வருகிருர்.

விடை. அவர் பரமண்டலத்துக்கேறினபோது தமது திருச்சபைக்குத் தமது ஊழியக்காரரை யனுப்பி அவர்களைக் கொண்டு தமது தீர்க்கதரிசனத் தொழிலை இன்னமும் நிறைவேற்றிக்கொண்டுவருகிருர் (எபேசி. ச, யக. யஉ; உ கொரிந். ரு, யகூ. உய).

கூகூங. விஞ. நம்முடைய பிரதான ஆசாரியரார்.

• விடை. இயேசு கிறிஸ்து (எபிரே. கூ, யச).

கூகூச. விஞ. பழைய ஏற்பாட்டின் பிரதான ஆசாரியர்களுடைய தொழிலென்ன.

விடை. அவர்கள் தங்களுக்காகவுஞ் சனங்களுக்காகவும் பலியிட்டுச் சனங்களுக்காக மனருடி அவர்களை ஆசீர்வதித்தார்கள்.

கூகூரு. விஞ. இயேசு கிறிஸ்துவினுடைய பிரதான ஆசாரியதொழிலுக்கடுத்த கிரியைகளென்ன.

விடை. அவர் தம்மையே பலியிட்டார். இப்போது மன்ருடுகிருர், ஆசீர்வதிக்கிருர்.

கூகூசா. விஞ. அவர் இட்டபலியைக் குறித்து அறியவேண்டியதென்ன.

விடை. ௧) பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்த ஆசாரியர்களைப்போல் தமக்காகவும், தம்முடைய பாவங்களுக்காவுமல்ல நம்முடைய பாவங்களுக்காகவுஞ் சர்வலோகத்தின் பாவங்களுக்காகவுந் தம்மைப் பலியிட்டார் (எபிரே. ௭, ௨௭—௨௮; ௧ பேது. ௩, ௰௮).

௨) அவர்களைப்போல் ஆடு மாடு முதலிய செந்துக்களையல்ல, தம்மைத்தாமே பிதாவாகிய பராபரனுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தார் (எபிரே. ௯, ௰௧—௰௪).

௩) பழைய ஏற்பாட்டின் ஆசாரியர் பாவங்களை நீக்கக்கூடாத பலிகளை அநேகந்தரஞ் செலுத்தினார்கள். அவரோ ஒரே விசை தம்மைத் தாமே பலியிட்டு இந்தப்பலியினால் எல்லாருக்கும் நித்திய இரட்சிப்பைச் சம்பாதித்தார் (எபிரே. ௯, ௨௫—௨௮; ௰, ௰—௰௫).

௩௩௭. வினா. இயேசுவானவர் பரமண்டலங்களுக்கு ஏறின பின்பு நமது பிரதான ஆசாரியராகச் செய்கிறதென்ன.

விடை. ௧) அவர் பிதாவாகிய பராபரனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்துகொண்டு தமது பலியால் உண்டான பலன்களைப் பலிக்கப்பண்ணி நமக்காக மன்றாடுகிறார் (எபிரே. ௭, ௨௪. ௨௫; ௧ யோவா. ௨, ௧).

௨) நம்மை ஆசீர்வதிக்கிறார் (லூக். ௨௪, ௫௰; எபேசி. ௧, ௩).

௩௩௮. வினா. நம்முடைய இராசா ஆர்.

விடை. இயேசு கிறிஸ்து (லூக். ௧, ௩௩).

௩௩௯. வினா. இராசாக்களுடைய தொழிலென்ன.

விடை. அவர்கள் தங்கள் குடிகளையாண்டு தங்கள் இராச்சியத்தில் நீதி நியாயங்களை நடப்பித்துத் தங்கள் குடிகளைப் பராமரித்துச் சத்துருக்களுக்கு அவர்களைக் காப்பாற்றி வருகிறதுதான்.

௩௪௰. வினா. இயேசு கிறிஸ்து நம்முடைய இராசாவாகச் செய்கிறதென்ன.

விடை. அவர் முன் சொல்லப்பட்டிருக்கிற காரியங்களையெல்லாஞ் செய்துகொண்டுவருகிறார்.

௩௪௧. வினா. கிறிஸ்துவின் இராச்சியபாரம் எத்தனை விதம்.

விடை. மூன்று விதம். அதாவது வல்லமையின் இராச்சியமுங் கிருபையின் இராச்சியமும் மகிமையின் இராச்சியமுமாம்.

௩௪௨. வினா. அவருடைய வல்லமையின் இராச்சியமாவதென்ன.

விடை. க) இயேசு கிறிஸ்து தமது பிதாவோடு கூடச் சகலசெந்துக்களையும் நடத்தி ஆண்டுகொண்டு (எபேசி. க, உய—உஉ; எபிரே. க, ங),

உ) தமது சத்துருக்களுடைய ஆலோசனையை அவத்தமாக்கி அவர்களைச் செயஙகொள்ளுகிறதுதான் அவருடைய வல்லமையின் இராச்சியம் (சங்கீ. ளய, க; உஉ, உஅ).

ஙசங. வினா. கிருபையின் இராச்சியமாவதென்ன.

விடை. இயேசு கிறிஸ்து இந்தலோகத்திலிருக்கிற தம்முடைய திருச்சபையை நடத்தி ஆண்டுகொண்டு அதில் உட்பட்டிருக்கிறவர்களை விசேஷித்த கிருபையாகப் பராமரித்து அவர்களுக்குப் பற்பல தேவ வரங்களை அளித்து சகல சத்துருக்களுக்கும் அவர்களை விலக்கிக் காப்பாற்றிவருகிறது தான் அவருடைய கிருபையின் இராச்சியம் (சங்கீ. உ, சு; மத். ங, உ).

அது இந்த லோகத்தின் இராச்சியமல்ல, வான இராச்சியமாயிருக்கிறது (யோவா. யஅ, ஙசு).

ஙசச. வினா. மகிமையின் இராச்சியமாவதென்ன.

விடை. இயேசு கிறிஸது தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவாகளைத் தமது நித்திய மகிமைக்குப்பங்காளராக்கி என்றென்றைக்கும் அவர்கள் மேலும் அவர்களோடுங்கூட இராசரீகம்பண்ணுகிறதுதான் மகிமையின் இராச்சியம் (உ தீமோ. ச, யஅ; யோவா. யஎ, உச; லூக். யஉ, ஙஉ; உஉ, உகூ; மத். உரு, ஙச).

ஙசரு. வினா. இயேசு கிறிஸ்துவை நம்முடைய தீர்க்கதரிசியும் பிரதான ஆசாரியரும் இராசாவுமாக அறிந்து விசுவாசிக்கிற நாஞ் செய்யவேண்டியதென்ன.

விடை. க) அவர் நமது தீர்க்கதரிசியாகப் போதித்த ஞான உபதேசத்தைக்கேட்டு அதின்படி நடக்கக்கடவோம் (ரு மோசே யஅ, யரு. யசு).

உ) அவர் நமது பிரதான ஆசாரியராகச் செய்த உபகாரத்தை அவத்தமாக்காமலும் அவர் நமது பாவங்களுக்காக இட்டபலியைக் காலினால் மிதித்துப்போடாமலும் அவர் சம்பாதித்த இரட்சிப்பை விசுவாசத்தினால் நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளக் கடவோம் (எபிரே. ய, உகூ—உகூ).

ங) அவரை நமது இராசாவாக ஏற்றுக்கொண்டு அவருக்கு முழுமனதோடுங் கீழ்ப்படியக் கடவோம் (லூக். யகூ, உஎ; அறிவி. யகூ, யசு).

கிறிஸ்தவர்களென்ற பெயரின் மகிமையைக் குறித்து.

௩௪௬. வினா. கிறிஸ்துவால் நமக்குவந்த பேரென்ன.

விடை. கிறிஸ்தவர்கள் என்றபெயர் அவரால் நமக்குவந்தது (நடபடி ௰௧, ௨௬).

௩௪௭. வினா. நாங் கிறிஸ்தவர்களென்று அழைக்கப்படுகிற முகாந்தரமென்ன.

விடை. விசுவாசமுள்ள மெய்க்கிறிஸ்தவர்களெல்லாருங் கிறிஸ்துவின் பரிபூரணத்தினால் கிருபையின்மேல் கிருபையைப்பெற்று அவரோடு அபிஷேகம் பண்ணப்படுகிறதுதான் நாங் கிறிஸ்தவர்களென்று அழைக்கப்படுகிறதற்கு முகாந்தரம் (யோவா. ௧, ௰௬; ௧ யோவா. ௨, ௨௰).

௩௪௮. வினா. கிறிஸ்தவர்களாகிய நாம் ஆராலே அபிஷேகம் பண்ணப்பட்டோம்.

விடை. கிறிஸ்து அபிஷேகம் பண்ணப்பட்டது போல் நாமும் ஞானஸ்நானத்தில் நமக்குக் கிடைத்த பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டோம். அந்த அபிஷேகம் விசுவாசத்தினால் நம்மிடத்தில் நிலைகொண்டிருக்குது (யோவா. ௩, ௩; ௧ யோவா. ௨, ௨௭).

௩௪௯. வினா. நாம் என்னத்திற்காக அபிஷேகம் பண்ணப்பட்டோம்.

விடை. நாம் நம்முடைய தலையாகிய கிறிஸ்துவுக்குக் கீழாகத் தீர்க்கதரிசிகளும் பிரதான ஆசாரியர்களும் இராசாக்களுமாயிருக்கும்படிக்கு அபிஷேகம் பண்ணப்பட்டோம் (அறிவி. ௧, ௫ ௬; ௧ பேதுரு ௨, ௯).

௩௫௰. வினா. கிறிஸ்தவர்களாகிய நாந் தீர்க்கதரிசிகளாகச் செய்யவேண்டியதென்ன.

விடை. ௧) நாந் தேவ வசனத்தைக் கருத்தாய் ஆராய்ந்துபார்த்து நமது இரட்சிப்புக்காக அதிலடங்கியிருக்கிற ஞானோபதேசங்களை யறியப்பிரயாசப்படவேணும் (யோவா. ௫, ௩௯).

௨) நாம் பராபரனால் போதிக்கப்பட்டு மற்றவர்களுக்குப் போதித்துப் புத்திசொல்லி அவர்களைக் கிறிஸ்து மார்க்கத்தில் வர்த்திக்கப்பண்ணவேண்டும் (யோவா. ௬, ௪௫; கொலோ. ௩, ௰௬; ௧ தெசலோ. ௫, ௰௧. ௰௪).

௩௫௧. வினா. கிறிஸ்தவர்களாகிய நாம ஆசாரியர்களாகச் செய்யவேண்டியதென்ன.

விடை. ௧) நாம் ஆசாரியர்களாக ஞானப்பலிகளை யிட்டு (௧ பேது. ௨, ௫),

௨) எல்லா மனிதருக்காகவும் விசேஷமாய் விசுவாசிகளுக்காகவும் மன்றாடி (௧ தீமோ. ௨, ௧; எபேசி. ௬, ௰௮),

௩) எல்லாரும் ஆசீர்வாதத்தை யடைகிறதற்கு உதவியாயிருக்கவேண்டும் (௧ பேது. ௩, ௯).

௩௫௨. வினா. நாம் பராபரனுக்கு இடத்தக்க பலி என்ன.

விடை. ௧) நம்முடைய சரீரத்தையும் அதிலுள்ள அவயவங்களையும் நீதியின் ஆயுதங்களாக்கவேண்டியது (ரோமர் ௬, ௰௩; ௰௨, ௧; கொலோ. ௩, ௫).

௨) நம்முடைய ஆத்துமத்தைப் பராபரனுக்குத் தெய்வாலயமாக்கவேண்டியது (சங்கீ. ௫௪, ௰௮; ௧ பேது. ௨, ௫).

௩) நம்முடைய மனது முழுவதையும் பராபரனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படியப்பண்ணவேண்டியது (௧ சாமு. ௰௫, ௨௨; மத். ௬, ௰; ௨௬, ௩௯).

௪) நம்முடைய பழைய ஆதாமைத் தினந்தோறுங் கொன்றுபோட்டு பராபரன் வரவிடுந் துன்பங்களைப் பொறுமையாய்ச் சகிக்கவேண்டும் (கொலோ. ௩, ௫; பிலிப். ௨, ௰௭. ௰௮).

௫) நாஞ் சந்தோஷ நாளிலுந் துக்கநாளிலும் நாவினாலும் இருதயத்தினாலும் பராபரனை இடைவிடாமல் ஸ்தோத்திரிக்கவேண்டும் (எபிரே. ௰௩, ௰௫; சங்கீ. ௫௰, ௰௪. ௨௩).

௬) பராபரனுக்கு ஸ்தோத்திரமுந் தரித்திரருக்கு உதவியுமாகத் தர்மஞ் செய்யவேண்டும் (எபிரே. ௰௩, ௰௬; மத். ௨௫, ௪௰).

௩௫௩. வினா. கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மை இராசாக்களென்று சொல்லலாமோ.

விடை. ஆம். கிறிஸ்துதாமே நம்மை இராசாக்களாக்கினார். நாம் இந்த உலகத்துக்கடுத்த இராசாக்களல்ல, கிறிஸ்துவின் இராச்சியத்தில் ஞான இராசாக்களாயிருக்கிறோம் (அறிவி. ௧, ௬; ௧ பேது. ௨, ௯).

௩௫௪. வினா. ஞான இராசாக்களாகிய நமது மகிமையென்ன.

விடை. ௧) நாம் நம்மை உத்தமமாய் நடத்தி நம்மிடத்தில் கிளம்புகிற ஆகாத ஆசை இச்சைகளைத் தேவ பெலத்தினால் கீழ்ப்படுத்தி (ரோமர் ௬. ௰௨),

௨) ஆத்தும சத்துருக்களாகிய பிசாசு லோகம் மாமிசத்தோடு யுத்தம்பண்ணி அதுகளைச் செயித்து (எபேசி. ௬, ௰௨).

௩) கிறிஸ்துவோடு மோட்சத்தில் என்றென்றைக்கும் ஆண்டுகொள்ளுவது தான் நமது மகிமை (௨ தீமோத். ௨, ௰௧. ௰௨; அறிவி. ௩, ௨௧).

இயேசுகிறிஸ்துவினால் உண்டாகும் இரட்சிப்பைப்பற்றியது.

௩௫௫. வினா. இயேசுகிறிஸ்து தமது மூன்றுவிதமான தொழிலின்படியே மனிதசாதிக்குச் செய்த உபகாரமென்ன.

விடை. மனிதசாதியின இரட்சிப்புத்தான். ஆனதால் அவரை நம்முடைய கர்த்தரென்றும் நம்மை அவருடைய சனங்களென்றுஞ் சொல்லுகிறோம் (௧ கொரி. ௮, ௬; ரோமர் ௰௪, ௯; தீத்து ௨, ௰௪).

௩௫௬. வினா. நம்மை மீட்டிரட்சித்தவரார்.

விடை. மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமாகிய இயேசுகிறிஸ்து தமது இரண்டுசுபாவங்களின்படியேயும் நம்மை மீட்டிரட்சித்தார் (யோவா. ௩, ௰௬; நடபடி ௨௰, ௨௮; கலாத். ௪, ௪. ௫; ௧ தீமோ. ௨, ௫. ௬).

௩௫௭. வினா. இயேசுகிறிஸ்து ஆரைமீட்டிரட்சித்தார்.

விடை. பாவத்தினால் சாபத்துக்குள்ளாயிருக்கிற மனிதரெல்லாரையும் மீட்டிரட்சித்தார் (லூக். ௰௯, ௰; ௧ யோவா. ௨, ௨; ரோமர் ௫, ௰௮. ௰௯).

௩௫௮. வினா. அப்படியிருக்க எல்லாரும் இரட்சிப்பையடைவார்களா.

விடை. அவரை விசுவாசிக்கிறவர்கள் அவர் எல்லாருக்காகவுஞ் சம்பாதித்த இரட்சிப்பில் பங்கு பெறுவார்கள். அவரை விசுவாசியாதவர்கள் இரட்சிப்பில் பங்குபெறாமல் தங்கள் குற்றத்தினால் கெட்டுப்போகிறார்கள (யோவா. ௩, ௰௭—௰௯).

௩௫௯. வினா. அவர் என்னத்திலிருந்து நம்மை மீட்டிரட்சித்தார்.

விடை. எல்லாப்பாவங்களிலும் மரணத்திலும் பிசாசின் வல்லமையிலுமிருந்து நம்மை மீட்டிரட்சித்தார்.

௩௬௰. வினா. அவர் எல்லாப்பாவங்களிலுமிருந்து நம்மை மீட்டிரட்சித்ததெப்படி.

விடை. ௧) அவர் சென்மப்பாவத்திற்காகமாத்திரமல்ல, எல்லாக்கர்மப்பாவங்களுக்காகவும் பலியாகி உத்தரவாதபண்ணினதினாலேதான் (ஏசா. ௫௩, ௪—௬; கொலோ. ௨, ௰௩. ௰௪; எபிரே. ௯, ௨௮; ௧ பேது. ௨, ௨௪).

௨) நாம் அவரை விசுவாசித்தால் நமது பாவங்களெல்லாம் நமக்கு மன்னிக்கப்படவும் (௧ யோவா. ௧, ௭; கொலோ. ௧, ௰௪),

௩) பாவம் இனி நம்மை ஆண்டுகொள்ளாதிருக்கவும் (ரோமர் ௬, ௰௪; ௧ யோவா. ௩, ௫. ௬),

௪) கடைசியில் அது நம்மைவிட்டு முழுவதும் நீங்கிப்போகவும் நமக்குக் கிருபைசெய்திருக்கிறார் (௧ கொரி. ௧, ௫௰; ௨ தீமோ. ௪, ௰௮).

௱௬௧. வினா. அவர் எந்த மரணத்திலிருந்து நம்மை மீட்டிரட்சித்தார்.

விடை. பாவத்தின் சம்பளமாகிய எல்லாவிதமரணத்திலிருந்தும் நம்மை மீட்டிரட்சித்தார் (௧ மோசே ௨, ௰௭; ரோமர் ௬, ௨௩).

௧) ஆத்தும மரணத்தையும் பராபரனுடைய கோபாக்கினையையும் நம்மைவிட்டு நீக்கிப்போட்டு நம்மைப் பராபரனோடு ஒப்புரவாக்கி நவமான ஜீவனில் நடக்க நமக்குப் பெலனளிக்கிறார் (௨ தீமோத். ௧, ௰; ரோமர் ௬, ௪; ௧ பேது. ௨, ௨௧)

௨) அவர் சரீரமரணத்தையும் அதோடு சேர்ந்திருக்கிற சகல வியாதி நோக்காடுகளையும் நமக்கு ஆக்கினையாயிராமல பிரயோசனமான தண்டனையும் மோட்சவாசலுமாயிருக்கச் செய்திருக்கிறார் (யோவா. ௰௧, ௨௫. ௨௬; ரோமர் ௮, ௩௫—௩௭).

௩) நாம் நித்தியமரணமாகிய நரகவேதனையை யடையாமல் நித்தியசீவனையடையக்கிருபைபுரிந்திருக்கிறார் (௧ தெசலோ. ௧, ௰.)

௱௬௨. வினா. பின்னை என்னத்திலிருந்து நம்மை மீட்டிரட்சித்தார்.

விடை. பிசாசின் வல்லமையிலிருந்து நம்மை மீட்டிரட்சித்தார். கிறிஸ்து பிசாசைச் செயங்கொண்டதினால் அதற்குப்பாவத்தினிமித்தம் நமதுபேரில உண்டாயிருந்த வல்லமை நீங்கிப்போயிற்று (௧ மோசே ௩, ௰௫; லூக. ௰௧, ௨௧. ௨௨; கொலோ. ௧, ௰௩; ௨; ௰௫; எபிரே. ௨, ௰௪. ௰௫: ௧ யோவா. ௩, ௮).

௱௬௩. வினா. இயேசுகிறிஸ்து என்னத்தினால் நம்மை மீட்டிரட்சித்தார்.

விடை. ௧) அவர் மனிதராகிய நாஞ் செய்யமுடியாதிருந்தவைகளைச்செய்து நியாயப்பிரமாணத்தை நமக்காகக்

குறைவற்ற பிரகாரம் நிறைவேற்றினார் (கலாத். ௪, ௫; ரோமர். ௫, ௰௮ ௰௯).

௨) நாம் நமது பாவங்களினிமித்தஞ் சுமக்கவேண்டிய கோபாக்கினையைத் தாமே சுமந்துதீர்த்தார் (ஏசாயா ௫௩, ௫). இப்படியே அவர் பொன்னினாலுமல்ல, வெள்ளியினாலுமல்ல, விலைமதிக்கக்கூடாத தமது பரிசுத்த இரத்தத்தினாலுங் குற்றமில்லாமற் பட்டபாடுகளினாலும் மரணத்தினாலும் நம்மை மீட்டிரட்சித்தார் (௧ பேது. ௧, ௰௮. ௰௯).

௱௬௪. வினா. அவர் நம்மை மீட்டிரட்சிக்க அவரை ஏவினதென்ன.

விடை. அவர் தமது பிதாவையும் என்னையும் மற்றப் பாவிகளையுஞ் சிநேகித்த சிநேகமே அவரை ஏவிவிட்டது.

௱௬௫. வினா. அவர் என்னத்துக்காக நம்மை மீட்டிரட்சித்தார்.

விடை. நாம் இனிப்பாவஞ் செய்யும்படிக்கு நமக்கு இடமுண்டாக நம்மை இரட்சிக்காமல் (ரோமர் ௬, ௧. ௰௫),

௧) நாம் அவருடைய சொந்தமாயிருந்து (ரோமர் ௰௪, ௮; தீத்து ௨, ௰௪),

௨) அவருக்குக்கீழாக அவருடைய இராச்சியத்தில் பிழைத்து (ரோமர் ௬, ௰௧; கொலோ. ௧, ௰௩. ௰௪),

௩. நித்திய நீதியிலுங் குற்றமற்ற உத்தமத்திலும் மோட்சானந்தத்திலும் அவருக்கு ஊழியஞ் செய்யும்படிக்கு நம்மை மீட்டிரட்சித்தார் (௧ பேது. ௨, ௨௪; ௨ கொரி. ௫, ௰௪. ௰௫; கலா. ௨, ௰௯. ௨௰; லூக்கா ௧, ௭௪. ௭௫).

இயேசுகிறிஸ்துவின் நிலைமைகளைப்பற்றியது.

௱௬௬. வினா. கிறிஸ்துவைப்பற்றிய உபதேசத்தில் இன்னும் அறியவேண்டியதென்ன.

விடை. அவர் தம்மைத்தாமே தாழ்த்தினதும் உயர்த்தினதுமான அவருடைய இரண்டு நிலைமைகளைப்பற்றியறிய வேண்டியது (பிலிப்பி. ௨, ௫—௰௧).

௱௬௭. வினா. அவர் தம்மைத்தாமே தாழ்த்தினாரென்பதற் கர்த்தமென்ன.

விடை. அவர் பராபரனுடைய ஒன்றான குமாரனுஞ் சகல மகிமையையுமுடைய கர்த்தருமாயிருந்தும் எல்லாமனிதருக்கும் ஊழியஞ்செய்யும்படி இந்த லோகத்திற்கு வந்தார்.

அவர் தமது தேவமகிமையை இவ்வுலகிலிருந்தகாலத்தில் அதிகமாய்க் காண்பியாமல் மனிதனை ஈடேற்றத் தம்மைத்தாமே சகலவித நிர்ப்பந்தங்களுக்கும் மரணத்துக்கும் ஒப்புக்கொடுத்தாரென்பதுதான் இதற்காதாரம்.

௩௬௮. வினா. அவர் தம்மைத் தாழ்த்தின முகாந்தரமென்ன.

விடை. ௧) அகங்காரத்தினாலே பாவத்தில் விழுந்த மனிதராகிய நம்மை அவர் தம்முடைய தாழ்மையினால் பாவத்திலிருந்து இரட்சிக்கவேண்டுமென்கிறதும் (௧ மோசே ௩, ௫. ௬; யோவா. ௰௩, ௮; ௨ கொரி. ௮, ௯),

௨) இரட்சிப்பையடைந்தவர்களுக்குத் தம்முடைய தாழ்மையினால் நல்மாதிரியைக் காண்பிக்க விரும்பினதுந்தான் அவர் தம்மைத் தாழ்த்தினதற்கு முகாந்தரம் (யோவா. ௰௩, ௰௫; பிலி. ௨, ௫).

௩௬௯. வினா. அவர் தம்மைத் தாழ்த்தினதற்கு அடையாளங்களெதவை.

விடை. ஐந்து அடையாளங்களுண்டு.

௧) கன்னிமரியாளிடத்தினின்று பிறந்தார். ௨) பாடுபட்டார். ௩) சிலுவையிலறையுண்டார். ௪) மரித்தார். ௫) அடக்கம்பண்ணப்பட்டார்.

௩௭௰. வினா. அவர் கன்னிமரியாளிடத்தினின்று பிறந்தது அவர் தம்மைத்தாமே தாழ்த்தினதற்கு அடையாளமா.

விடை. ஆம், மெய்யான பராபரனாகிய அவர் மோட்சத்தின் ஆண்டவராயிருந்தும் தரித்திரனாக இப்பூமியில் வந்து எளிய கன்னிஸ்திரீயாகிய மரியாளைத் தம்முடைய தாயாகத் தெரிந்துகொண்டு ஒரு மாட்டுக்கொட்டிலிலே பிள்ளையாகப் பிறந்தவுடனே பலபல நிர்ப்பந்தத்திற்குள்ளானார் அவர் தம்மைத்தாமே தாழ்த்தினதற்கு அடையாளமாம் (லூக். ௨).

௩௭௧. வினா. இதினால் நமக்கு வருகிற ஆறுதலென்ன.

விடை. நாம் பராபரனுடைய பிள்ளைகளாகப் பிறக்கும்படிக்கு அவர் மனிதனாகப் பிறந்தாரென்றும் நாம் ஐசுவரியமுள்ளவர்களாகும்படிக்கு அவர் தரித்திரமுள்ளவரானாரென்றும் நமக்கு ஆறுதலாக அறிந்திருக்கிறோம் (கலாத். ௪, ௪. ௫. ௰௧; ௨ கொரி. ௮, ௯).

௩௭௨. வினா. இதையறிந்திருக்கிற நாஞ் செய்யத்தக்கதென்ன.

விடை. நாம் இந்தப் பூலோகத்தில் தரித்திரரும் எளியவர்களுமாயிருக்கும்போது சந்தோஷப்படவேண்டும். நாஞ்

சிறுவமுதல் மரணபரியந்தம் பெருமையை நாடாமல் மனத்தாழ்மையாய் நடக்கவேண்டும்.

௩௭௩. வினா. கிறிஸ்து தம்மைத்தாந் தாழ்த்தினதற்கு இரண்டாம் அடையாளமென்ன.

விடை. அவர் முப்பத்துமூன்று வருஷம் இந்தலோகத்தில் பிரயாசப்பட்டு அநேக உபத்திரவங்களையனுபவித்துப் பொந்தியுபிலாத்து என்கிறவனகீழ் பாடுபட்டாரென்பது அவர் தம்மைத்தாழ்த்தினதற்கு இரண்டாம் அடையாளமாம்.

௩௭௪. வினா. அவர் எந்தச் சுபாவத்தின்படி பாடுபட்டார்.

விடை. அவர் மனித சுபாவத்தின்படி பாடுபட்டார். ஆனால் மனித சுபாவமுந தேவசுபாவமும் அவரிடத்தில் ஒன்றியிருக்கிறபடியால் அவர் மெய்யான தேவனுகவும் பாடுபட்டாரென்று சொல்லவேண்டும.

௩௭௫. வினா. அவர் பட்டபாடுகளென்ன.

விடை. ௧) அவர் பலவித நிந்தைகளையும் வேதனைகளையும் அநுபவித்துப புறம்பாகப்பாடுபட்டார் (மத். ௨௬. ௨௭; மாற. ௰௪. ௰௫: லூக். ௨௨. ௨௩; யோவா. ௰௮. ௰௯; ஏசா. ௫௩, ௨. ௩).

௨) அவர் மனிதராகிய நமது பாவங்களைத் தமதுமேல் ஏற்றுக்கொண்டு நம்முடைய பாவங்களுக்காக வரவேண்டிய பராபரனுடைய கோபாக்கினையை அநுபவித்து உள்ளாகவும் பாடுபட்டார் (ஏசா. ௫௩, ௫-௬; ௨ கொரி. ௫, ௨௧; கலாத். ௩, ௰௩).

௩௭௬. வினா. அவர் பட்டபாடுகளில் மகாப்பெரிய பாடுகளென்ன.

விடை. அவர் நமது பாவங்களுக்காகப்பட்ட உள்ளான பாடுகள் தான். இந்தப்பாடுகளினால் கெத்சேமனே தோட்டத்தில் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில விழுந்தது. அவர் சிலுவையில், என் பராபரனே, என பராபரனே, நீர் என்னைக்கைவிட்டதேதென்று கூப்பிட்டார் (மத். ௨௬, ௩௭. ௩௮; லூக். ௨௨, ௪௪; மத். ௨௭, ௪௬).

௩௭௭. வினா. அவர் எப்படிப்பட்டவராகப்பாடுபட்டார்.

விடை. ௧) அவர் தமது பிதாவாகிய பராபரனுடைய திருச்சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து பாவிகளாகிய நம்மைச்சிநேகித்து (ஏசா. ௫௩, ௪-௬; நடபடி ௨, ௨௩; கலாத். ௨, ௨௦).

௨) குற்றமில்லாத அவர் நம்முடைய குற்றங்களுக்காக மனப்பூர்வத்தோடும் முறையிடாத பொறுமையோடும் பாடு

பட்டார் (லூக். ௰௮, ௩௩; ஏசா. ௫௩, ௭; ௧ பேது. ௨, ௨௩).

௯௭௮. வினா. அவர் பாடுபட்ட முகாந்தரமென்ன.

விடை. அவர் மனிதர்களுடைய பாவங்களுக்காகப் பராபரனுடைய நீதிக்கு உத்தரவாதம் பண்ணவும் (யோவா. ௧, ௨௯; ஏசாயா. ௫௩, ௬. ௭),

௨) நமக்கு வரவேண்டிய ஆக்கினைகளை எல்லாம் விலக்கவும் (௧பேது. ௨, ௨௪; ஏசா. ௪௩, ௨௪. ௨௫),

௩) நமக்குக் கிருபையையுங் குறைவற்ற நீதியையுஞ் சம்பாதிக்கவும் பாடுபட்டார் (ஏசாயா. ௫௩, ௫; ரோமர் ௫, ௰).

௯௭௯. வினா. இதை யறிந்திருக்கிற நாஞ் செய்யத்தக்கதென்ன.

விடை. ௧) இவர் நமது பாவங்களுக்காக இவ்வளவு பாடுபட்டதினால் பாவங்களை எல்லாம் மிகவும் அருவருத்து அவர் பாடுகளால் வந்த பலன்களை விசுவாசத்தினால் நமக்குப் பலிக்கப்பண்ணி (௧பேதுரு. ௨, ௨௪; ௧ யோவா. ௧, ௭),

௨) அவர் நமக்குப் பின்வைத்த மாதிரியின்படி இந்த லோகத்தில் சகல உபத்திரவங்களையும் நல்ல மனதோடும் பொறுமையோடும் ஏற்றுக்கொண்டு அவரைப் பின்செல்ல வேண்டும் (௧ பேது. ௨, ௨௧; ௪, ௧. ௨; பிலிப். ௨, ௫)

௯௮௰. வினா. இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே தாழ்த்தினதற்கு மூன்றாம் அடையாளமென்ன.

விடை. அவர் நமக்காகச் சாபமாகிச் சிலுவையிலறையப்பட்டதுதான்.

௯௮௧. வினா. அவர் சிலுவையிலறையப்பட்டதினால் நமக்கு வருகிற ஆறுதலென்ன.

விடை. இதினால் அவர் தாமே சாபமாகி நமது பேரிலிருந்த சாபத்தை நீக்கிப்போட்டு (கலா. ௩, ௰௩), என்றென்றைக்கும் நிந்திக்கப்படத்தக்கவர்களாயிருக்கிற நமக்குப் பராபரனுக்கு முன்பாகச் சங்கையை வரப்பண்ணி நமது மாமிச ஆசை இச்சைகளைக் கீழ்ப்படுத்துகிறதற்கான வல்லமையை நமக்காகச் சம்பாதித்தருளினார் (ரோமர் ௬, ௬—௮).

௯௮௨. வினா. இதையறிந்த நாஞ் செய்யவேண்டியதென்ன.

விடை. ௧) சிலுவையின் வசனம் நமக்குத் தேவபெலனும் தேவ ஞானமுமாயிருக்கும்படி கவலைப்படவேண்டும் (௧ கொரி. ௧, ௰௮. ௨௪. ௨௫).

௨) நம்முடைய மாமிசத்தை அதின் ஆசை இச்சைகளோடுங்கூடச் சிலுவையிலறையவேண்டும் (கலாத். ௫, ௨௪; ௬, ௰௪).

௩) நமமுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு அவ ரைப் பின்செல்லவேண்டும் (மத். ௰, ௩௮; ௰௬, ௨௪).

௩௮௩. வினா. இயேசுகிறிஸ்து தம்மைத்தாந் தாழ்த்தின தற்கு நாலாம் அடையாளமென்ன.

விடை. அவர் நமக்காகப்பாடுபட்டு முடித்தபிற்பாடு (யோவா. ௰௯, ௩௰), தம்முடைய சீவனைத்தாமாய் ஒப்புக்கொ கொடுத்து மெய்யாகவே மரணமடைந்தது அவர் தம்மைத் தாந் தாழ்த்தினாரென்பதற்கு நாலாம் அடையாளமாம் (யோ வா. ௰, ௰௮).

௩௮௪. வினா. அவர் மரணமடையவேண்டியதேன்.

விடை. மரணம் பாவத்தின் சம்பளமாயிருக்கிறதினால் தான் (௧ மோசே ௨, ௰௭; ரோமர் ௬, ௨௩).

௩௮௫. வினா. அவர் அடைந்தமரணத்தினால் நமக்கு வரும் பிரயோசனமென்ன.

விடை. ௧) தமது மரணத்தினால் நம்மைப் பராபர னோடு ஒப்புரவாக்கி மரணத்தையும் அதின் வல்லமையை யுடைய பிசாசையும் மேற்கொண்டார் (ரோமர் ௫, ௰; ௨ தீமோ. ௧, ௰; எபிரே. ௨, ௰௪).

௨) தமது மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற் றிருக்கிற நமக்குப் பாவத்துக்கு மரித்து நவமான சீவனில் நடக்கும்படி பெலனளிக்கிறார் (ரோமர் ௬, ௨-௪).

௩) நம்மைச்சரீர மரணத்தாலே நித்திய சீவனில் பிர வேசிக்கப்பண்ணுவார் (யோவா. ௰௧, ௨௫. ௨௬; ரோமர். ௰௪, ௭—௯).

௩௮௬. வினா. நாம் இதையறிந்து செய்யத்தக்கதென்ன.

விடை. கர்த்தர் நமக்காக அடைந்தமரணபலத்தினால் அநுதினமும் பாவங்களுக்குச் செத்து நமக்கு வரப்போகிற மரணத்துக்குப் பயப்படாமல் சாகும்போது நமமுடைய ஆத் துமத்தைக் கிறிஸ்துவின் கையில் ஒப்புக்கொடுக்கவேண்டும் (பிலிப். ௧, ௨௩).

௩௮௭. வினா. இயேசுகிறிஸ்து தம்மைத்தாந் தாழ்த்தின தற்கு ஐந்தாம் அடையாளமென்ன.

விடை. அவர் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட் டது அவர் தம்மைத்தாமே தாழ்த்தினதற்கு ஐந்தாம் அடை யாளமாம்.

௩௮௮. வினா. அவர் அடக்கம்பண்ணப்பட்ட முகாந்தர மென்ன.

விடை. ௧) அவர் மெய்யாகவே மரித்ததற்கு அடையாளமாக அடக்கம்பண்ணப்பட்டார்.

௨) சென்மசுபாவமாய்ப் பிறந்த மனிதரெல்லாரும் பராபரனுடைய சாபத்தினால் மண்ணில்புதைக்கப்பட்டு அழுகி மண்ணாய்ப்போகிற இடத்தில் கர்த்தரும் வைக்கப்பட்டு நாம் அழிவைக்காணாதிருக்கக் கனிகொடுக்கப்போகிற கோதும்பை மணியைப்போல் பூமியில் புதைக்கப்பட்டார் (௧ மோசே ௩, ௰௯; சங்கீ. ௰௬, ௰; யோனா. ௰௨, ௨௪).

௩௮௯. வினா. கர்த்தர் அடக்கம்பண்ணப்பட்டதினால் நமக்கு வரும் பிரயோசனமென்ன.

விடை. அவர் நம்முடைய பாவங்களையெல்லாங் கல்லறையில புதைத்ததுந் தவிர நாம் மண்ணில் புதைக்கப்படுகிறதற்குப் பயப்படாதிருக்கும்படிக்கு நமது கல்லறைகளைப் பரிசுத்தமாக்கினார்.

௩௯௰. வினா. தம்மைத்தாம் இவ்வளவாய்த் தாழ்த்தின இயேசுவானவர் தம்மை மறுபடியும் உயர்த்தினாரல்லவோ.

விடை. ஆம். அவர் பாடுபட்டு மரித்தடக்கப்பட்ட பிற்பாடு தம்மைத்தாம் மறுபடியும் உயர்த்தித் தம்முடைய மகிமையிற் பிரவேசித்தார்.

௩௯௧. வினா. அவர் தம்மைத்தாம் உயர்த்தினதற்கு எத்தனை அடையாளங்களுண்டு.

விடை. ஐந்து. ௧) பாதாளங்களிலிறங்கினார். ௨) மூன்றாம்நாள் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தருளினார். ௩) பரமண்டலங்களுக்கேறினார். ௪) சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனுடைய வலது பாரிசத்திலிருக்கிறார். ௫) அவ்விடத்திலிருந்து சீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்கவருவார்.

௩௯௨. வினா. அவர் பாதாளங்களிலிறங்கினாரென்பதற்கர்த்தமென்ன.

விடை. அவர் தமது சீவனைத்திரும்ப எடுத்துக்கொண்டபிற்பாடு சபிக்கப்பட்டவர்களிருக்கிற ஸ்தலமாகிய நரகத்திலிறங்கி அங்கே சபிக்கப்பட்டவர்களுக்கு நடுக்கமுண்டாகத்தமமை வெற்றி சிறந்தவராகவும் பிசாசின் இராச்சியத்தை நிர்மூலமாக்கிறவராகவும் வெளிப்படுத்தினாரென்கிறது அவர் பாதாளங்களிலிறங்கினாரென்பதற்கர்த்தமாம் (எபே. ௪, ௯; ௧ பேது. ௩, ௰௯; கொலோ. ௨, ௰௫).

௩௯௩. வினா. இதினால் நமக்குவருகிற ஆறுதலென்ன.

விடை. இயேசுகிறிஸ்துவின் பாரிசமாயிருக்கிறவர்களைப் பிசாசானாலும் நரகமானாலும் பலவந்தஞ் செய்யக்கூடாதென்று அறிந்திருக்கிறோம் (ஓசேயா ௰௩, ௰௪).

௱௧௪. வினா. நாமிதையறிந்து செய்யத்தக்கதென்ன.

விடை. இயேசுகிறிஸ்துவால் செயிக்கப்பட்ட சத்துருவாகிய பிசாசுக்கு நாம் ஊழியஞ்செய்யாமல் கிறிஸ்துவினுடைய பலத்தினால் பிசாசையும் அதின் கிரியைகளையுஞ் செயங்கொள்ளத்தக்கதாக அநுதினமும் பிரயாசப்படவேண்டும்.

௱௧௫. வினா. கர்த்தர் தம்மைத்தாமே உயர்த்தினாரென்கிறதற்கு இரண்டாம் அடையாளமென்ன.

விடை. அவர் மூன்றாம்நாள் மரித்தோரிடத்தினின்று உயிர்த்தெழுந்தருளினாரென்பது அவர் தம்மைத்தாமே உயர்த்தினாரென்கிறதற்கு இரண்டாம் அடையாளம்.

௱௧௬. வினா. அவரை எழுப்பினவரார்.

விடை. பிதாவாகிய பராபரன் அவரை எழுப்பினாரென்கிறதுமல்லாமல் (சங். ௰௬, ௰. ௰௪; ரோமா ௬,௪; அப்படி ௨, ௨௪) அவர் தம்மைத்தாமே எழுப்பினாரென்றுஞ் சொல்லவேண்டும் (யோ. வா. ௰, ௰௮; ரோமர் ௧, ௧). அவர் பிதாவோடேகூட மெய்யான பராபரனாயிருக்கிறபடியால் பிதாவின் வல்லமை அவருடைய வல்லமையும் அவருடைய வல்லமை பிதாவின் வல்லமையுமாயிருக்கிறது.

௱௧௭. வினா. அவர் உயிர்த்தெழுந்தருளின விதமென்ன.

விடை. அவர் மரணத்தில் பிரிந்துபோன தமது ஆத்துமத்தையும் அழிந்துபோகாத தமது சரீரத்தையுந் திரும்ப ஒன்றாகச்சேர்த்து மறுபடியுந் தமது சீவனை எடுத்துக்கொண்டு மிகவும் பிரகாசமுள்ள சரீரத்தில் தமது உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிக்கொடுக்கப்போகிற தம்முடைய சீஷர்களுக்கும் மற்றவர்களுக்கும் அநேக விசை தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தது தானே.

௱௧௮. வினா. கர்த்தர் உயிர்த்தெழுந்தருளினதினால் நமக்கு வருகிற ஆறுதலென்ன.

விடை. ௧) நம்முடைய பாவங்களுக்காக மரித்த ஆண்டவர் திரும்ப உயிர்த்தெழுந்தருளினபடியினாலே அவர் நமக்குச் சம்பாதித்த இரட்சிப்பும் நீதியுங் குறைவற்ற இரட்சிப்பென்றும் பரிபூரண நீதியென்றும் ஆறுதலாக நிச்சயித்திருக்கிறோம் (ரோமர் ௪, ௨௫; ௫, ௯).

௨) அவர் உயிர்த்தெழுந்தருளின பலத்தினால் நமக்கு நவமான சீவனில் நடக்கிறதற்கான பெலன் உண்டென்று ஆறுதலாக அறிந்திருக்கிறோம் (எபேசி. ௨, ௫. ௬).

௩) நாம் மாமிச உயிர்த்தெழுதலில் அவருடைய பலத்தினால் நித்தியசீவனுக்கென்று உயிர்த்தெழுந்திருப்போமென்று ஆறுதலாக அறிந்திருக்கிறோம் (யோவா. ௰௧, ௨௫. ௨௬; ௧ கொரி. ௰௫, ௨௧—௨௩; ௨ கொரி. ௪, ௰௪).

௩௯. வினா. நாம் இதையறிந்து செய்யத்தக்கதென்ன.

விடை. நாஞ் சகல பாவங்களுக்கும் மரித்து நவமான சீவனில் நடக்கவேண்டும் (ரோமர் ௬, ௬ – ௰௧).

௪௰. வினா. கர்த்தர் தம்மைத்தாமே உயர்த்தினதற்கு மூன்றும் அடையாளமென்ன.

விடை. அவர் பரமண்டலத்துக்கேறினது அவர் தம்மைத்தாமே உயர்த்தினதற்கு மூன்றும் அடையாளமாம் (லூக். ௨௪, ௫௰; நடபடி ௧, ௯).

௪௰௧. வினா. அவர் எந்தப்பிரகாரம் பரமண்டலங்களுக்கேறினார்.

விடை. காணப்படுகிறதும் மகிமையுள்ளதுமானபிரகாரம் பரமண்டலங்களுக்கேறினார்.

௪௰௨. வினா. அவர் எங்கே ஏறினார்.

விடை. ௧) அவர் காணப்படுகிற பிரகாரம் மோட்சவான்களிருக்கிற பரமண்டலத்துக்கும் (யோவா. ௰௪, ௨. ௩),

௨) எல்லா வானங்களுக்குமேலாக எங்கும் நிறைந்திருக்கிற பராபரனிருக்கும் பரமண்டலத்துக்கும் ஏறினார் (எபேசியர் ௪, ௰).

௪௰௩. வினா. அவர் பரமண்டலங்களுக்கு ஏறின பின்பு இப்பூமியிலுள்ள நம்மோடு கூட இருக்கிறதில்லையா.

விடை. அவர் காணப்படுகிற பிரகாரம் நம்மோடிருக்கிறதில்லை. ஆனால் காணப்படாத பிரகாரந் தமது இருசுபாவங்களின்படியே எப்போதும் எவ்விடத்திலும் நம்மோடிருக்கிறார் (மத். ௨௮, ௨௰).

௪௰௪. வினா. அவர் பரமண்டலத்துக்கேறினதினால் நமக்கு வருகிற ஆறுதலென்ன.

விடை. ௧) அவர் பரமண்டலத்திலுள்ள பராபரனுடைய சமுகத்தில் நமக்காகப் பிரசன்னமாயிருந்து வேண்டுதல் செய்கிறாரென்றும் (எபிரே. ௯, ௨௪; ௭, ௨௪, ௨௫; ரோமர் ௮, ௩௪),

௨) அவர் பரமண்டலத்திலிருந்து மனிதருக்கு ஈவுகளைக்கொடுத்து விசேஷமாய்ப் பரம ஈவாகிய பரிசுத்த ஆவியைக் கட்டளையிட்டுவருகிறாரென்றும் (எபேசி. ௪, ௮. ௰௧. ௰௨; யோவா. ௰௬, ௭; லூக். ௨௪, ௪௯; நடபடி ௨, ௩௩),

௩) அவர் நம்மைப் பரமண்டலத்திற்குப் பாத்திரராக்கி நாஞ்சாகும்போது நம்மைத் தம்மண்டையிற் சேர்த்துக்கொள்ளுவாரென்றும் ஆறுதலாக அறிந்திருக்கிறோம் (எபேசியர் ௨, ௬; யோவா. ௰௪, ௩; ௰௨, ௨௬; ௰௭, ௨௪).

௪௱௫. வினா. நாம் இதை யறிந்து செய்யத்தக்கதென்ன.

விடை. ௧) இந்தப் பூமி நாம் எப்போதும் இருக்கும் இடமல்லவென்றும் நாம் இங்கே பரதேசிகளாயிருக்கிறோமென்றும் பரமண்டலமே நமக்குக் குறித்திருக்கிற சுதந்தரமென்றும் நினைத்துக்கொண்டு (எபி. ௰௩, ௰௪; பிலிப். ௩, ௨௰),

௨) இந்தப் பூமிக்கடுத்த காரியங்களையல்ல, பரத்துக்கடுத்த காரியங்களை விரும்பித்தேடி (கொலோ. ௩, ௧—௪),

௩) பரமண்டலத்தில் கிறிஸ்துவண்டையில் இருக்க ஆசைப்படவேண்டும் (பிலிப். ௧, ௨௩; ௨ கொரிந். ௫, ௮).

௪௱௬. வினா. இயேசுகிறிஸ்து தம்மைத்தாம் உயர்த்தினதற்கு நாலாம் அடையாளமென்ன.

விடை. அவர் தமது பிதாவின் வலதுபாரிசத்திலிருக்கிறது அவர் தம்மைத்தாமே உயர்த்தினதற்கு நாலாம் அடையாளமாம் (மாற்கு ௰௬, ௰௯).

௪௱௭. வினா. பிதாவாகிய பராபரனுடைய வலது பாரிசமாவதென்ன.

விடை. பராபரன் சரீரமில்லாத ஆவியாயிருக்கிறதால் அவருக்குச் சரீர அவயவங்களுண்டென்றும் அவருக்கு வலது பாரிசம் இடது பாரிசமுண்டென்றுஞ் சொல்லக்கூடாது. கிறிஸ்து பிதாவின் வலதுபாரிசத்திலிருக்கிற மகிமையானது அவர் பிதாவோடுகூட சர்வத்திற்கும் வல்லவரும் எங்கும் நிறைந்தவரும் எல்லாவற்றையும் ஆண்டுகொள்ளுகிறவருமாயிருக்கிற மகிமைதான்.

௪௱௮. வினா. இயேசுகிறிஸ்து எப்படிப் பிதாவின் வலது பாரிசத்திலிருக்கிறார்.

விடை. அவர் தமது பிதாவோடு பரலோகத்தையும் பூலோகத்தையும் ஆண்டுகொண்டு விசேஷமாகத் தம்மை விசுவாசிக்கிற பரிசுத்தவான்களின் கூட்டமாகிய திருச்சபையை ஆண்டு நடத்திக்காப்பாற்றி எப்போதும் அதோடிருக்கிறார் (எபிரெ. ௧, ௩; எபேசி. ௧, ௰௯. ௨௰).

௱௯. வினா. அவர் எத்தனை காலம் இப்படிப் பிதாவின் வலதுபாரிசத்திலிருப்பார்.

விடை. அவர் எல்லாச் சத்துருக்களையுந் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடுமட்டாகப் பிதாவின் வலதுபாரிசத்திலிருப்பார். இந்த லோகம்முடியும்போது அவர் தமது மரணத்தின் பலத்தினால் ஆண்டுகொள்ளுகிற கிருபையின் இராச்சியத்தைப் பிதாவுக்கு ஒப்புக்கொடுப்பார் (௧ கொரி. ௰௫, ௨௪ — ௨௮).

௱௰. வினா. இந்த உபதேசத்தினால் நமக்கு வருகிற ஆறுதலென்ன.

விடை. ௧) அவர் தாழ்த்தப்பட்டுச் சம்பாதித்த இரட்சிப்பை உயர்த்தப்பட்டு நமக்குப் பலிக்கப்பண்ணவுஞ் சத்துருக்களையெல்லாஞ் செயங்கொள்ளவும் அவருக்குப் பெலனுண்டென்றும் (சங்கீ. ௱௰, ௧; எபேசி. ௧, ௨௰—௨௨; எபிரே. ௰, ௰௨. ௰௩),

௨) அவர் தமது மகிமையில் நமக்கனுசாரியாக நம்மை அநுதினமும் விசாரித்துக்கொண்டு நமக்குச் சமீபமாயிருந்து பரிசுத்த ஆவியை நமக்கு அனுப்புகிறவரென்றும் (மத்தே. ௨௮, ௨௰; எபேசி. ௪, ௰; நடபடி ௨, ௩௩),

௩) அவர் தம்மை உண்மையாய் விசுவாசிக்கிறவர்களுக்குத் தம்மோடு தமது ஆசனத்தில் உட்காருதலை அளிப்பாரென்றும் ஆறுதலாக அறிந்திருக்கிறோம் (அபி. ௩, ௨௧).

௱௰௧. வினா. நாம் இதையறிந்து செய்யத்தக்கதென்ன.

விடை. கர்த்தர் எவ்வளவுக்கு உயர்த்தப்பட்டாரோ அவ்வளவுக்கு அவரைச்சங்கித்து அவருடைய கோபத்திற்குப் பயந்து அவர் கிருபையைத் தேடிக்கொள்ளவேண்டும் (சங்கீ. ௨, ௰ - ௰௨; லூக. ௰௯, ௨௭).

௱௰௨. வினா. இயேசுகிறிஸ்து தம்மைத்தாம் உயர்த்தினதற்கு ஐந்தாம் அடையாளமென்ன.

விடை. அவர் சீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்கவருவது அவர் தம்மைத்தாம் உயர்த்தினதற்கு ஐந்தாம் அடையாளமாம்.

௱௰௩. வினா. அவர் எப்போது நடுத்தீர்க்க வருவார்.

விடை. பராபரன் சகல மனிதரையுங் கணக்குக் கேட்கவும் எல்லாரையும் நியாயந்தீர்க்கவும் ஒரு நாளைக் குறித்தார் (நடபடி ௰௭, ௩௧). ஒருவரும் அறியாத அந்நாளில் நடுத்தீர்க்கவருவார் (மாற்கு ௰௩, ௩௨).

௱௰௪. வினா. அவர் எப்படிக்கொத்தவராக வருவார்.

விடை. அவர் தமது இரண்டு சுபாவங்களின்படி காணப்படுகிற பிரகாரம் மகாப்பெரிய வல்லமையோடுஞ் சொல்லிமுடியாத மகிமையோடும் (யோவா. ௫, ௨௭; நடபடி ௧, ௰௧; லூக். ௨௧, ௨௭; மத். ௨௫, ௩௧;) வானத்திலிருந்து வருவார் (௧ தெசலோ. ௪, ௰௬. ௰௭; பிலிப். ௩, ௨௰).

௪௱௰௫. வினா. அவர் என்னத்துக்காக வருவார்.

விடை. ௧) அவர் முந்தின விசை சகல மனிதரையும் மீட்டிரட்சிக்க வந்தார். அவர் இரண்டாம் விசை வரும்போது சகல மனிதரையுங் கணக்குக் கேட்கவும் பிசாசுக்களையும் மனிதரையும் நியாயந்தீர்க்கவும் வருவார் (ரோமர் ௰௪, ௰; ௨ கொரிந். ௫, ௰; ௨ பேது. ௨, ௪; யூதா ௬-ம் வசனம்).

௨) அப்போது அவருடைய நியாயாசனத்துக்கு முன்பாக நல்லவர்களும் பொல்லாதவர்களுஞ் சீவனுள்ளோரும் மரித்தோரும் வந்து நிற்கவேண்டியது (மத். ௨௫, ௩௧—௩௩; நடபடி ௰, ௪௨; ௨ தீமோ. ௪, ௨; அறி. ௨௰, ௰௨).

௩) நல்லவர்களின் பாவங்கள் இந்தலோகத்தில் மன்னிக்கப்பட்டுப்போனதினால் அவர்கள் ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாகாமல் (யோவா. ௫, ௨௪; ௩, ௰௮), இங்கே தேவகிருபையினால் செய்த நற்கிரியைகளுக்காகச் சுத்தக்கிருபையினால் வரும்பலனையும் புகழ்ச்சியையுஞ் சந்தோஷத்தையுமடைந்து (ரோமர் ௨, ௬. ௭; மத். ௨௫, ௩௪—௪௰), சபிக்கப்பட்டவர்களைக் கிறிஸ்துவோடு கூட இருந்து நியாயந் தீர்ப்பார்கள் மத். ௰௯, ௨௮; ௧ கொரி. ௬, ௨. ௩).

௪) பொல்லாதவர்கள் இந்தலோகத்தில் செய்த பாவங்களையெல்லாங் கண்ணாரக்கண்டு கிறிஸ்துவுக்குமுன்பாக மகாப்பயத்தோடும் நடுக்கத்தோடும் நின்று சபிக்கப்பட்டுப் பிசாசுகளோடுகூட நரகத்தில் தள்ளுண்டுபோவார்கள் (மத். ௨௫, ௪௧—௪௬; ரோமர் ௨, ௫. ௮—௰).

௪௱௰௬. வினா. இயேசுகிறிஸ்து எந்தப் பிரமாணத்தின்படி நியாயந்தீர்ப்பார்.

விடை. அவர் நமக்குக் கொடுத்திருக்கிற தேவ வசனத்தின்படி நியாயந்தீர்ப்பார் (யோவா. ௰௨, ௪௮).

௪௱௰௭. வினா. இந்த உபதேசத்தினால் நமக்கு வருகிற ஆறுதலென்ன.

விடை. நியாயந்தீர்க்கும் ஆண்டவர் நம்மை இரட்சித்த கர்த்தரும் நமது சகோதரரும் நேசருமாயிருக்கிறபடியினால் அவர் நியாயந்தீர்க்கவரப்போகிற நாளுக்கு நாம் பயப்படாமல் அவர் எப்போது வருவாரென்று மகா சந்தோஷத்

தோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கலாம். அந்த நாள் நாம் இந்தலோகத்தில் அநுபவித்த சகல நிர்ப்பந்தங்களும் முடிவா கிற நாளும் என்றென்றைக்குஞ் சந்தோஷப்படத் துவக்கு கிற நாளுமாயிருக்கும் (உ தெசலோனி. க, கூ—அ).

௱௰அ. வினா. நாம் இதை யறிந்து செய்யத்தக்கதென்ன.

விடை. கர்த்தா எப்போது வருவாரென்பதை நாம் அறியாதிருக்கிறபடியினால் அநுதினமும் ஆயத்தப்பட்டவர்க ளாய விழித்துக்கொண்டு மத். உரு, ௰௩; மாற். ௰௩, ௩௫—௩௭; லூக் உக, ௩௪—௩௬) எச்சரிக்கையோடுஞ் சாவதா னத்தோடும் நடந்து சகல பாவங்களுக்கும் விலகி நம்மைக் காக்கவேண்டும் (பிரசங்கி ௰உ, ௰௩: ௰௪).

௱௰௯. வினா. நம்முடைய இரட்சிப்பைப்பற்றிய இரண் டாம் பிரிவில் அடங்கியிருக்கிற எல்லாவற்றையும் நாம் மெய் யாகவே விசுவாசிக்கிறோமென்கிறதற்கு நிச்சயமான அடை யாளமென்ன.

விடை. நாம் பாவத்தினாலும் மரணத்தினாலும் பிசாசி னாலுஞ் சோதிக்கப்படுகிறபோதல் நம்முடைய நம்பிக்கை யையெல்லாங் கிறிஸ்துவினபேரில் வைத்து அவருக்காகப் பிழைக்கவுஞ் சாகவும் ஆயத்தமாயிருந்து பாவத்துக்காலும் லோகத்துக்காலும் பிசாசுக்காலும் ஊழியஞ் செய்யா மல் நம்மை மீட்டிரட்சித்த கர்த்தராகிய இயேசுவுக்குமாத்தி ரம் ஊழியஞ்செய்து நம்முடைய இரட்சிப்பை அவரிடத்தில் தேடிக்கொண்டு வருகிறோமென்பது நாம் இரண்டாம் பிரி வில் அடங்கியிருக்கிற எல்லாவற்றையும் மெய்யாகவே விசு வாசிக்கிறோமென்கிறதற்கு நிச்சயமான அடையாளமாம் (ரோமர் ௰௪, எ—௯; உ கொரிந். ரு, ௰ரு. ௰எ).

விசுவாசப்பிரமாணத்தின் மூன்றாம் பிரிவைப்பற்றியது.

௱உ௰. வினா. விசுவாசப்பிரமாணத்தின் மூன்றாம் பிரிவு என்னத்தைப்பற்றியது.

விடை. அது நம்மைப் பரிசுத்தமாக்குகிற கிரியை யைப்பற்றியது (உ கொரிந். ரு, ௯. ௰).

வினா. மூன்றாம் பிரிவென்ன.

விடை. பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன். பொதுவான பரிசுத்த சபையும் பரிசுத்தவான்களுடைய

ஐக்கியமும் பாவமன்னிப்பும் மாமிச உயிர்த்தெழுதலும் நித்திய சீவனுமுண்டென்று விசுவாசிக்கிறேன்.

வினா. இதற்கர்த்தமென்ன.

விடை. நான் என் சுய புத்தியினாலும் பலத்தினாலும் என் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவும் அவரைச்சேர்ந்து அண்டிக்கொள்ளவுங் கூடவே கூடாது. ஆகையால் பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தைக்கொண்டு என்னை வரவழைத்துத் தம்முடைய வரங்களினால் என்னைப் பிரகாசிப்பித்து மெய்யான விசுவாசத்தினால் என்னைப் பரிசுத்தமாக்கிக் காப்பாற்றி வருகிறாரென்று விசுவாசிக்கிறேன்.* இப்படியே அவர் பூமியிலுள்ள எல்லாத்திருச்சபையையும் வரவழைத்துக்கூட்டிச்சேர்த்துப் பிரகாசிப்பித்துப் பரிசுத்தமாக்கி மெய்யான ஏகவிசுவாசத்திலே இயேசுகிறிஸ்துவினிடத்தில் காப்பாற்றிக்கொண்டு வருகிறார். அவர் இந்தத் திருச்சபையில் எனக்கும் விசுவாசமுள்ள யாவருக்குந் தினந்தோறுஞ் சகல பாவங்களையுங் கிருபையாய் மன்னித்துக்கொண்டு நடுத்தீர்வைநாளில் என்னையும் இறந்துபோன யாவரையும் எழுப்பி எனக்கும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற யாவருக்கும் நித்தியசீவனைக்கொடுப்பார். இது உண்மையானவார்த்தை.

பரிசுத்தஆவியானவரைப்பற்றியது.

௬௨௧. வினா. விசுவாசப்பிரமாணத்தின் மூன்றாம் பிரிவின்படி ஆரை விசுவாசிக்கிறோம்.

விடை. பரிசுத்தஆவியானவரை விசுவாசிக்கிறோம்.

௬௨௨. வினா. பரிசுத்தஆவியானவரார்.

விடை. அவர் தேவத்துவத்தில் மூன்றாம் ஆள். அவர் பிதாவினிடத்திலிருந்துங் குமாரனிடத்திலிருந்துஞ் சொல்லக்கூடாத பிரகாரம் புறப்பட்டு நம்மைப்பரிசுத்தமாக்குகிற கிரியையினால் தம்மை விசேஷமாக வெளிப்படுத்துகிறார் (யோவா. ௰௫, ௨௬; ௰௬, ௰௩; ரோமர் ௮, ௯; கலாத். ௪, ௬).

௬௨௩. வினா. அவர் பரிசுத்தஆவியென்று அழைக்கப்படுவானேன்.

விடை. க) அவர் தம்மில் தாமே பரிசுத்தருள்ளவரும் உ) நமக்குள் பரிசுத்தத்தை உண்டுபண்ணுகிறவருமாயிருக்கிறதினால் அவர் பரிசுத்தஆவியென்று அழைக்கப்படுகிறார்.

சஉச. வினா. பரிசுத்தஆவி மெய்யான பராபரனா.

விடை. ஆம், அவர் பிதாவோடுங் குமாரனோடும் மெய்யான பராபரனாயிருக்கிறார். ஏனென்னில் க) அவர் பராபரனென்றும் (நடபடி ரு, ௩. ச; க கொரி. ௩, ௰சு),

உ) அவர் தேவ இலட்சணங்களை உடையவராயிருக்கிறாரென்றும் (க கொரி. உ, ௰; சங்கீ. ளகூகூ, எ),

௩) தேவ கிரியைகளை நடப்பிக்கிறாரென்றும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (சங். ௩௩, சு; யோபு ௩௩, ச).

சஉரு. வினா. பரிசுத்தஆவியானவர் மனிதரின் ஈடேற்றத்துக்காகச்செய்யுந் தொழில் எத்தனை விதம்.

விடை. நாலுவிதம். க) கடிந்துகொள்ளுகிற தொழிலும் உ) போதிக்கிறதொழிலும் ௩) புத்திசொல்லுகிறதொழிலும் ச) தேற்றரவுபண்ணுகிற தொழிலுந்தான்.

சஉசு. வினா. பரிசுத்தஆவி கொடுக்கிற வரங்களென்ன.

விடை. ஞானம், புத்தி, விசுவாசம், சிநேகம், நம்பிக்கை, கல்வி, அறிவு, ஞானத்தெளிவு, சமாதானம், ஆத்தும இளைப்பாறுதல், ஞானச்சந்தோஷம், செபம்பண்ணுகிறதற்கான திராணி, நற்கிரியைகளைச் செய்கிறதற்கான உச்சாகம், ஞானக்காரியங்களில் வேண்டிய சுறுசுறுப்பு, தேவபலம், மரியாதை, சுத்தாங்கம், உண்மை, மனத்தாழ்மை, மெத்தனவு, ஞானத்தைரியம், பொறுமை இது முதலானதுகளெல்லாம் பரிசுத்தஆவி கொடுக்கிறவரங்கள்தான்.

சஉஎ. வினா. பரிசுத்தஆவியைப்பற்றிய உபதேசத்தினால் நமக்கு வருகிற ஆறுதலென்ன.

விடை. க) பராபரன் தமது பரிசுத்தஆவியை எல்லாருக்கும் அருளுகிறாரென்றும் (லூக். ௰க, ௰௩),

உ) இவர் நம்முடைய இருதயங்களில் வாசம்பண்ணி நம்முடைய இரட்சிப்புக்குச் சந்தேகமில்லாத சாட்சியும் அச்சாரமுமாயிருக்கிறாரென்றும் (ரோமர் அ, கூ—௰க. ௰சு),

௩) அவர் நமது இரட்சிப்புக்கு வேண்டியதும் ஞானக்காரியங்களைச் செய்யப் பெலனற்றவர்களான நாஞ் செய்யக்கூடாததுமான எல்லாவற்றையுந் தமது தேவபலத்தினால் தொடங்கி நடத்தி முடிப்பாரென்றும் நாம் அறிந்திருக்கிறது நமக்குமிகவும்பின ஆறுதலாயிருக்கிறது (க கொரி. உ, ௰—௰ரு; ரோமர் அ, ௰ச. உகூ. உஎ).

சஉஅ. வினா. நாமிதை யறிந்து செய்யத்தக்கதென்ன.

விடை. க) பராபரன் தம்முடைய பரிசுத்த ஆவியை யும் அவருடைய வரங்களையுமெல்லாம நமக்குக்கொடுக்கவேண் டுமென்று அவரை மனத்தாழ்மையோடு இடைவிடாமல் வேண் டிக்கொள்ளக்கடவோம் (லூக். யக, யங; யோவா. ச, ய; எபேசி. க, யஎ).

உ) நம்மில் வாசமாயிருக்கிற பரிசுத்தஆவியை நாம் மனதறியப்பாவஞ்செய்கிறதினால் துக்கப்படுத்தாமலுந் தூரத் துவிடாமலுமிருககக் கடவோம (க கொரி. ங, யசு.யஎ; எபே. ச, ஙய).

ங) அவர் தமக்குப்பிரியமான கிருடையின் கனிகளை யெல்லாம் நம்மில நடபபிக்கிறதறகு அவருக்கு இடங்கொடுக் கக்கடவோம் (கலாத. ரு, உஉ).

பரிசுத்தஆவியானவர் நம்மைப்பரிசுத்த மாக்குகிறதைப்பற்றியது.

சஉகூ. வினா. பரிசுத்தஆவியானவர் எநதக் கிரியையினால் தம்மை விசேஷமாய வெளிப்படுத்துகிறார.

விடை. நம்மைபபரிசுத்தமாக்குகிற கிரியையினால் தம் மை விசேஷமாய் வெளிப்படுத்துகிறார.

சஙய. வினா. சுபாவத்தில் நமக்குப்பரிசுத்த மில்லையோ.

விடை. இல்லை. நமது ஆதிததாய்தகப்பனமார் சிருஷ் டிப்பில் பெற்றுக்கொண்ட பரிசுத்தத்தைப் பாவத்தினால இழந் துபோனார்கள். ஆகையால் அவாகளிடத்திலிருநது சுபாவ மாய்ப் பிறந்த நாம் எலலாரும் பரிசுத்தராக அல்ல, பாவிக ளாக இருக்கிறோம்.

சஙக. வினா. நம்மை நாமே பரிசுத்தமாக்கிக்கொள்ளக் கூடாதோ.

விடை. கூடாது. செத்தவன் தன்னைத்தான் எழுப்பிக் கொள்ளக் கூடாததுபோல் நாம் க) நமது இருளான புத்தி யைப் பிரகாசிப்பித்துக்கொள்ளவும் (க கொரி. உ, யச),

உ) தாறுமாறாய்ப்போன நமது மனதைத் திரும்பப்பரி சுத்தமாக்கிக்கொள்ளவுங் கூடாது (உ கொரி. ங, ரு; க மோச அ, உக).

ங) அதற்கு ஞானச்சென்மமும் புதுச்சிருஷ்டிப்பும் வேண்டியது (எசேக. ஙசு, உஎ; யோவா. ங, ங—சு).

௪௩௨. வினா. நம்மைப் பரிசுத்தமாக்குகிறவரார்.

விடை. நம்மைப்பரிசுத்தமாக்குகிற கிரியை திரியேக பராபரனுடைய கிரியைதான். விசேஷமாய்ப் பரிசுத்தஆவி நம்மை பரிசுத்தமாக்குகிறார் (தீத்து ௩, ௫-௭).

௪௩௩. வினா. பரிசுத்தஆவி நம்மைப் பரிசுத்தமாக்குகிற ஞான எத்தனங்களென்ன.

விடை. சுவிசேஷமென்ற தேவவசனமும் ஞானத்திரவியங்களாகிய ஞானஸ்நானமும் இராப்போசனமும் பரிசுத்தஆவி நம்மைப் பரிசுத்தமாக்குகிற எத்தனங்கள் (யோவா. ௰௭, ௰௭; ரோமர் ௰௫, ௰௫; ௧ தெசலோ. ௨, ௰௩; எபே. ௫, ௨௬; ௧ கொரி. ௰௨, ௰௩).

௪௩௪. வினா. பரிசுத்தஆவியானவர் நம்மைப்பரிசுத்தமாக்குகிற ஒழுங்கென்ன.

விடை. அவர் ௧) சுவிசேஷத்தைக்கொண்டு நம்மை வரவழைக்கிறார். ௨) நம்மைத் தம்முடைய வரங்களால் பிரகாசிப்பிக்கிறா. ௩) மெய்யான விசுவாசத்தினால் நம்மைப் பரிசுத்தமாக்குகிறார். ௪) நம்மை விசுவாசத்தில் காபபாற்றிககொண்டுவருகிறார்.

௪௩௫. வினா. பரிசுத்தஆவி நம்மை வரவழைக்கிறாரென்பதற்கர்த்தமென்ன.

விடை. அவர் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாகப் பராபரனுடைய கிருபையைச்சுவிசேஷத்தினால் நமக்குவெளிப்படுத்தி அதை ஏற்றுக்கொள்ளுகிறதற்கு வேண்டிய பலத்தைக்கட்டளையிடுகிறாரெனபதுதான் அவர் நம்மை வரவழைக்கிறாரென்பதின் அர்த்தம் (௨ தெசலோ. ௨, ௰௪; ௨ தீமோ. ௧, ௯; யோவா. ௬, ௪௪).

௪௩௬. வினா. அவா ஆரை வரவழைக்கிறார்.

விடை. அவர் சகல மனிதரையும் வரவழைக்கிறார் (நடபடி ௰௭, ௨௭; ரோமர் ௧, ௰௬. ௨௰; ௧ தீமோ. ௨, ௰; ௨ பேது. ௩, ௯).

ஆனால் எல்லாரும் வரமாட்டார்கள். அநேகர் தங்களை வரவழைக்கிற பரிசுத்தஆவிக்கு எதிர்த்து நின்று கிறிஸ்துவண்டை வர மனதில்லாமல் தங்கள் பாவங்களில் கெட்டுப்போகிறார்கள் (ஏசாயா. ௬௫, ௨; மத். ௨௩, ௩௭; நடபடி ௭, ௫௧; ரோமர் ௰, ௰௬).

௪௱௩௭. வினா. பராபரன் விசுவாசிகளை அநாதியாய்த்தெரிந்து கொண்டாரோ.

விடை. ஆம், ௧) பராபரனுடைய கிருபையை விசுவாசமாய் ஏற்றுக்கொண்டு விசுவாசத்தில் மரணபரியந்தம் நிலைத்திருக்கிறவர்களை அநாதியாய்த் தெரிந்துகொண்டார் (எபேசி. ௧, ௩—௬; ரோமர் ௮, ௨௯. ௩௰; ௨ தெசலோ. ௨, ௰௩. ௰௪.

௨) ஆனால் அநேகர் கெட்டுப்போகிறதற்குப் பராபரன அவர்களை அநாதியாய்த் தள்ளிப்போட்டது காரணமல்ல. அவர்கள் கிறிஸ்துவண்டைக்குத் தங்களை வரவழைக்கிற பரிசுத்தஆவிக்கு எதிர்த்து நிற்கிறதே பராபரன் அவர்களைத் தள்ளிபபோட்டதற்குக் காரணம் (யோவா. ௩, ௰௮; ஓசேயா ௰௩, ௯).

௪௱௩௮. வினா. பரிசுத்தஆவியானவர் நம்மைப் பரிசுத்தமாக்குப்படி இன்னுஞ் செய்கிறதென்ன.

விடை. அவா தம்முடைய வரங்களினால் நம்மைப் பிரகாசிப்பிக்கிறார்.

௪௱௩௯. வினா. இதற்கர்த்தமென்ன.

விடை. ௧) அவர் சுபாவத்தினால் நமக்குண்டாயிருக்கிற அறியாமையைத் தேவவசனத்தினாலுஞ் சுவிசேஷத்தினாலும் நீக்கிப்போட்டுத்தேவ அறிவை நம்மிலுண்டாக்கி (எபேசி. ௫, ௰௩. ௰௪; ௬, ௰௭—௰௯),

௨) நியாயபபிரமாணத்தினால் நமது பாவங்களை நமக்கு வெளிப்படுத்தி பாவத்திறகாகப் படும்மெய்யான மனஸ்தாபததை நமககுள் உண்டுபண்ணுகிறா (ரோமர் ௩, ௨௰; ௭, ௭).

௩) அவா சுவிசேஷத்தினால் கிறிஸ்துவின் கிருபையை நமககுத்தெரியபபண்ணி அதை யேற்றுக்கொள்ளும் மெயயான விசுவாசத்தை நம்மில உணடுபணணுகிறா (௨ கொரி. ௩, ௬; எபேசி. ௧, ௰௩).

௪௱௪௰. வினா. தங்கள் பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபபபட்டு விசுவாசிககிறவர்கள் திரியேக பராபரனிடத்தில் பெற்றுககொள்ளுகிற உபகாரமென்ன.

விடை. திரியேக பராபரன் விசுவாசத்தைக்கொண்டு அவாகளை நீதிமான்களாக்குகிற உபகாரந்தான் (ரோமர் ௩, ௨௮; ௪, ௫; எபேசி. ௨, ௮. ௯). அதென்னவென்றால் திரியேக பராபரன இலவசமான கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு கிறிஸ்துவின குறைவற்ற நீதியை அவர்களுக்குப் பலிக்கபபணணுவா (ரோமர் ௩, ௨௧ [illegible]; பிலிப். ௩, ௯—௰),

௧) அவர்கள் பாவங்களையெல்லாம் அவர்களுக்கு மன்னித்து விடுகிறார் (நடபடி. ௰, ௪௩; ௰௩, ௩௮. ௩௯).

௨) அவர்களைத் தமது பிள்ளைகளாகவும் நித்திய ஜீவசுதந்தரராகவும் ஏற்றுக்கொள்ளுகிறார் (கலாத். ௩, ௨௬; ரோமா ௮, ௰. ௰௭).

௪௪௧. வினா. பரிசுத்தஆவியானவர் நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்குச் செய்கிறதென்ன.

விடை. அவர்களை மெய்யான விசுவாசத்தினால பரிசுத்தமாக்குகிறார்.

௪௪௨. வினா. இதற்கர்த்தமென்ன.

விடை. நீதிமானுக்குங் கிருபையைப்பெற்றுக்கொள்ளுகிற விசுவாசத்தினால பரிசுத்தஆவியானவர் ௧) நமக்குள் வந்து பிதாவோடுங் குமாரனோடுங்கூட நமது இருதயங்களில் வாசம்பண்ணி (ரோமர் ௮, ௯—௰௧; ௧ கொரி. ௩, ௰௬. ௰௭; கலாத். ௨, ௨௰; எபேசி. ௩, ௰௭; யோவா. ௰௪, ௨௩),

௨) நம்மைச் சிநேகிக்கிற பராபரனை மறுபடியுஞ் சிநேகிக்கிற நவமான இருதயத்தை நமக்களித்து நம்மை மறுசென்மமாய்ச் செனிப்பிக்கிறார (ரோமர் ௫, ௫; ௧ யோவா. ௪, ௰௯; ௫, ௧; ௨ கொரிந். ௫, ௰௭; எசேக். ௩௬, ௨௬).

௩) நம்மைப் பாவத்திற்குச் சாகப்பண்ணி நவமான ஜீவனில் நடக்கச்செய்து நம்மை யதிகமதிகமாய்ப் பரிசுத்தமாக்குகிறார் (எபேசி. ௪, ௨௨–௨௮; ௧ தெசலோ. ௪, ௩).

௪௪௩. வினா. பரிசுத்தஆவி பரிசுத்தமுள்ளவர்களுக்குச்செய்கிறதென்ன.

விடை. அவர்களை விசுவாசத்தில் காப்பாற்றுகிறார் (பிலிப். ௧, ௬; ௧ பேது. ௧, ௫; ௫, ௰; ௧ கொரி. ௰௫, ௫௮).

௪௪௪. வினா. பரிசுத்தஆவியானவா விசுவாசிகளை எவ்விதமாய் விசுவாசத்தில் காப்பாற்றுகிறார்.

விடை. அவர் தமது நாலுவிதத்தொழிலின்படி அவர்களைக் கடிந்துகொண்டு, போதித்து, புத்திசொல்லி, தேறறரவுபண்ணுகிறதினால்தான் அவர்களை விசுவாசத்தில் காப்பாற்றுகிறார்.

௪௪௫. வினா. அவர் விசுவாசிகளைக் கடிந்துகொள்ளுகிறதெப்படி.

விடை. அவாகளுக்குச சென்மப்பாவமும் பற்பல பலவீனங்களுங் குறைவுகளும் உண்டாயிருக்கிறபடியினால் (யாக. ௩, ௨; ௧ யோவா. ௧, ௮; சங்கீ. ௰௯, ௰௨), அவர்கள் பாவங

களில் பழகாமல் அதுகளை நாளடைவில் விட்டுவிடுகிறதற்கும் பெலவீனத்தால் செய்த பாவங்களுக்காக உடனே மனஸ்தாபப்படுகிறதற்குந் தங்களை யதிகமதிகமாய்ச் சுத்தம்பண்ணிக் கொள்ளுகிறதற்கும பரிசுத்தஆவியானவா இடைவிடாமல் அவர்கள் பாவத்தையும் பராபரனுடைய கிருபையையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி அவர்களைக் கடிந்துகொள்ளுகிறார் (அறிவி. ௩, ௰௬; தீத்து உ, ௰௧ – ௰௩).

௪௪௬. வினா. பரிசுத்தஆவியானவர் விசுவாசிகளுக்குப்போதிக்கிறதெப்படி.

விடை. அவர்கள் தேவவசனத்தைக்கேட்டு வாசித்து ஆராய்ந்துபார்க்கிறபோதெல்லாம் பரிசுததஆவியானவர் அவர்களுக்குத் தேவவெளிச்சத்தைக்கொடுத்து அவர்கள் ஞான உபதேசங்களையெல்லாந் தெளிவாயறிந்துகொள்ள வரமளித்து (நடபடி ௰௬, ௰௪; கொலோ. ௧, ௰.௰௧; எபேசி. ௧, ௰௬. ௰௭), அவர்கள் அறிந்த சத்தியத்தை அவாகள் இருதயங்களில் திடபபடுத்தி (௧ யோவா. ௫, ௬), ஆத்தும மோசங்களுக்கெல்லாம அவர்களைக்காப்பாற்றிவருகிறார் (உ தெச.௩, ௩).

௪௪௭. வினா. பரிசுத்தஆவியானவர் விசுவாசிகளுககுப் புத்தி சொல்லுகிறதெப்படி.

விடை. அவா விசுவாசிகளை இடைவிடாமல் செபம் பண்ணும்படி யேவி (ரோமர் அ, ௰௫; கலா. ௪, ௬; சகரி. ௧௨, ௰), பிசாசு லோகம் மாமிசமென்ற சத்துருக்களோடு போர்செய்யும்படிக்கு அவர்களுக்குத் தைரியமளிக்கது (எபே. ௬, ௰௪; ௧ யோவா. ௫, ௪; ரோமர் அ, ௰௩; கலாத். ௫, ௰௬), எல்லாவற்றையுங் கர்த்தருடைய சித்தத்தின்படி செய்கிறதற்கான சந்தோஷத்தையஞ் சுறுசுறுப்பையும் அவர்களுக்குக கட்டளையிடுகிறார் (ரோமா அ, ௰௪; கலாத். ௫, உஉ; பிலிப். ௩, ௰உ-௰௪).

௪௪அ. வினா. பரிசுத்தஆவியானவர் விசுவாசிகளைத் தேற்றரவுபண்ணுகிறதெப்படி.

விடை. ௧) அவர்கள் பராபரனுடைய பிள்ளைகளென்று அவர்கள் ஆவியுடனே சாட்சிகொடுத்துச் சமாதானத்தினாலுஞ் சந்தோஷத்தினாலும் அவர்களை நிறையப்பண்ணுகிறார் (ரோம. அ, ௰௬; ௰௪, ௰௭; ௰௫, ௰௩).

உ) பாவங்களுக்காகப்படும் மனஸ்தாபத்திலிருந்து கிருபைக்காகப்படுஞ் சந்தோஷத்தை உண்டுபண்ணுகிறார் (ஏசா. ௫௭, ௰௫. ௰௬; உ.கொரி. ௬, ௰).

ஈ) அவர்கள் அநுபவிக்கிற துன்பங்களையும் உபத்திரவங்களையுமெல்லாந் தம்முடைய ஆறுதலினால் லேசாக்கி அதினால் வரும் பலன்கள் இன்னதென்று அவர்களுக்கு வெளிப்படுத்தி எல்லாவற்றையும் பராபரனுடைய சித்தத்தின்படி உத்தரிக்கிறதற்கான தைரியத்தையுஞ் சந்தோஷத்தையுங் கட்டளையிடுகிறார் (ரோமர் ரு, க—ரு; உ கொரி. க, ஈ—ரு).

திருச்சபையைப்பற்றியது.

௪௪௯. வினா. திருச்சபையாவதென்ன.

விடை. அது பரிசுத்தஆவியானவர் தேவவசனத்தைக் கொண்டும் ஞானத்திரவியங்களைக்கொண்டும் பரிசுத்தமாக்கி வருகிற மனிதருடைய கூட்டமாயிருக்கிறது.

௪௫௰. வினா. திருச்சபை எப்படி அழைக்கப்படும்.

விடை. அது பொதுவான ஒரே சபையென்றும் பரிசுத்த சபையென்றும் அழைக்கப்படும்.

௪௫க. வினா. அது பொதுவான ஒரே சபையென்று சொல்லப்படுவானேன்.

விடை. க) பராபரன் மனிதர் எல்லாரையும் இரட்சிப்படைவதற்குச் சபைக்கு வரவழைக்கிறதினாலும் (மத். உஅ, ௰௯; மாற். ௰௬, ௰ரு; கொலோ. க, உ௩),

உ) அதில் உட்பட்டிருக்கிற கிறிஸ்தவர்கள் லோகமெங்குஞ் சிதறியிருக்கதும் அவர்கள் எல்லாருங் கிறிஸ்துவில் ஒரே கூட்டமாயிருக்கிறதினாலும் இரட்சிப்பின நன்மைகளில் எல்லாரும் ஏகமாய்ப் பங்கு பெறுவதினாலும் அது பொதுவான ஒரே சபையென்று சொல்லப்படும் (எபேசி. ௪, ௪-௬; ரோமர் ௰உ, ரு).

௪௫உ. வினா. அது பரிசுத்தசபையென்று சொல்லப்படுவானேன.

விடை. அதில் பரிசுத்தஆவியானவர் தேவவசனமும் ஞானத்திரவியங்களுமாகிய ஞான எத்தனங்களைக்கொண்டு பாவிகளைப் பரிசுத்தமாக்குகிறபடியால் அது பரிசுத்த சபையென்று சொல்லப்படும் (க கொரி. ௬, ௰௧; எபேசி. ரு, உரு-உஎ).

௪௫௩. வினா. பரிசுத்தவான்களின் ஐக்கியமாவதென்ன.

விடை. திருச்சபையின் மெய் அவயவங்களாகிய விசுவாசிகளுடைய அந்நியொந்நிய ஐக்கியந்தான். பரமண்டலத்திலுள்ள பாக்கியவான்களுக்கும் பூமியிலுள்ள விசுவாசி

களுக்கும் ஐக்கியமுண்டு (யோவா. ௰௭, ௨௰-௨௩; எபேசி. ௪, ௩-௬; எபிரே. ௰௨, ௨௨. ௨௩).

௫௪. வினா. திருச்சபையின் தலைவராார்.

விடை. இயேசுகிறிஸ்து நாதரே. அதினால் திருச்சபை அவர் சரீரமென்று சொல்லப்படும். திருச்சபையின் தலையாகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சரீரமாயிருக்கிற திருச்சபையை ஆண்டு அதின் மெய் அவயவங்களெல்லாருக்குஞ் சீவனையும் பலத்தையுங் கட்டளையிடுகிறார் (எபேசி. ௧, ௨௨. ௨௩; ௪, ௰௫-௰௮).

௫௫. வினா. திருச்சபையிலுள்ள கிறிஸ்தவர்களுக்குள் அநேகர் பொல்லாதவர்களாயிருக்கிறார்களே. அவர்களைக் குறித்துச் சொல்லவேண்டியதென்ன.

விடை. அவர்கள் புறம்பாய்த் திருச்சபையில் சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றுக்கிறிஸ்தவர்களென்னப்பட்டுப் பராபரனுடைய திருவசனத்தைக் கேட்டுப் பரிசுத்த இராப்போசனத்தை வாங்கினாலும் அவர்கள் தீங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பிக் கர்த்தருடைய சித்தத்தின்படி நடவாமலிருக்கிறதால் அவர்களைக் கிறிஸ்துவின் மெய்யான அவயவங்களென்னாமல் செத்த அவயவங்களென்று சொல்லவேண்டும் (அறிவி. ௩, ௧; ௰௫. ௰௬; ௨ தீமோத். ௩, ௫). ஆனால் அவர்கள் கர்த்தரின் சரீரமாகிய் திருச்சபையிலிருக்குந்தனிலுங் குணப்பட்டு விசுவாசித்து மறுபடியும் மெய்யான அவயவங்களாக அவர்களுக்கு இடமுண்டு (அறிவி. ௩, ௨. ௩. ௰௮. ௰௯). அவர்கள் திருச்சபையில் தங்களுக்கு ஆயத்தமாயிருக்கிற கிருபையை முற்றிலுந் தள்ளிப்போட்டால் அவர்களுக்கு இரட்சிப்பு கிடைக்காது (யோவா. ௰௫, ௬).

௫௬. வினா. பொல்லாதவர்களுந் திருச்சபையிலிருக்கிறதால் அதிலுள்ள வித்தியாசமென்ன.

விடை. அதில் காணப்படுகிற திருச்சபை காணப்படாத திருச்சபையென்னும் வித்தியாசமுண்டு.

௫௭. வினா. காணப்படுகிற திருச்சபையாவதென்ன.

விடை. அழைக்கப்பட்டவர்களுந் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் அடங்கியிருக்கிற திருச்சபை காணப்படுகிற திருச்சபையென்று சொல்லப்படும். அதில் நல்லவர்களும் பொல்லாதவர்களுங் கலந்திருக்கிறார்கள் (மத். ௰௩, ௨௰—௩௰. ௪௭-௫௰; ௨௨, ௰-௰௪; ௨ தீமோ. ௨, ௨௰. ௨௧).

௫௮. வினா. காணப்படாத திருச்சபையாவதென்ன.

விடை. அது தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் கூட்டந்தான். பராபரனையன்றி ஒருவனும் மனிதனின் இருதயத்திலுள்ள விசுவாசத்தைக் காணக்கூடாதபடியினாலே அது காணப்படாத திருச்சபையென்று சொல்லப்படும் (உ தீமோ. உ, ௰கூ; மத். ௰௩, உ௯). ஆகிலும் பரிசுத்தவான்களின் தேவாராதனையினாலும் பரிசுத்த நடக்கையினாலும் அவர்கள் கிறிஸ்துவினிமித்தம் படுகிற துன்பங்களினாலும் இது இவ்வுலகிலுங் காணப்படும் (க பேது. உ, ௯. ௰; மத். ௫, ௰௪-௰௭; நடபடி உ௮, உஉ). நித்திய மகிமையில், காணப்படுகிற திருச்சபைக்குங் காணப்படாத திருச்சபைக்கும் வித்தியாசமிராது (யோவா. ௰௭, உ௪; மத். உ௫, ௩௪. ௪௧).

௪௫௯. வினா. இப்பூமியிலுள்ள காணப்படாத திருச்சபைக்கு வேறேபேருண்டா.

விடை. உண்டு. அதின் அவயவங்களாகிய விசுவாசிகள் பிசாசு லோகம் மாமிசத்தோடு இடைவிடாமல் போராடுகிறபடியால் அதற்குப்போராடுகிற திருச்சபை என்கிற பேருண்டு (எபேசி. ௬, ௰உ; மத். ௰, உ௩; கலா. ௫, ௰௭). இவ்வுலகத்தில் போர்செய்து செயங்கொண்டு (யோவா. ௰௪, உ௭), மோட்ச இராச்சியத்தில் பிரவேசித்த பிறபாடு அது வெற்றிசிறந்த திருச்சபை என்றுசொல்லப்படும் (அறிவி. ௭, ௯-௰௪; மத். ௰௬, ௰௮).

௪௬௰. வினா. காணப்படுகிற திருச்சபையின் அடையாளங்களென்ன.

விடை. சுவிசேஷஞ் சுத்தமாய்ப் பிரசங்கிக்கப்படுகிறதும் ஞானத்திரவியங்கள் சுவிசேஷத்தின்படி நிதானமாய்க் கையாடப்படுகிறதுமாகிய இவ்விரண்டு அடையாளங்கள்தான். காணப்படுகிற இந்த அடையாளங்கள் எங்கே இருக்கிறதோ அங்கே காணப்படுகிற திருச்சபைமாத்திரமல்ல, காணப்படாத திருச்சபையுமுண்டு. அதுகள் எங்கே இல்லையோ அங்கே திருச்சபையுமில்லை.

௪௬௧. வினா. காணப்படாத திருச்சபையிலுள்ள மெய்விசுவாசிகளுக்குரிய அடையாளங்களென்ன.

விடை. க) அவர்கள் எல்லா அநியாயத்தையும் விட்டுவிலகுகிறதும் (உ தீமோ. உ, ௰௯),

உ) பராபரனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறதும் (யோவா. ௮, ௩௧. ௩௪. ௪௭),

௩) தங்களையும் லோகத்தையும் வெறுத்து விடுகிறதும் (லூக். ௯, உ௩; ௰௪, உ௬),

௪) இயேசுகிறிஸ்துவைப் பின்செல்லுகிறதும் (யோ. ௰, ௨௬. ௨௭),

௫) ஒருவரையொருவர் அந்நியோந்நியமாய்ச் சிநேகிக்கிறதும் (யோவா. ௰௩, ௩௪. ௩௫),

௬) ஒருவரோடொருவர் சமாதானமாயிருக்கிறதும் (எபேசி. ௪, ௩-௬),

௭) லோகத்தால் பகைக்கப்பட்டுத் துன்பப்படுகிறதும் (யோவா. ௰௫, ௰௮. ௰௯; ௨ திமோ. ௩, ௰. ௰௧) காணப்படாத திருச்சபையிலுள்ள மெய்க்கிறிஸ்தவர்களுக்குரிய அடையாளங்களாம்.

௪௬௨. வினா. திருச்சபைக்கடுத்த உபதேசத்தினால் நமக்கு வருகிற ஆறுதலென்ன.

விடை. பராபரன் மனிதராகிய நம்மை அத்தனையாய்ச் சிநேகித்து நம்மைத் தம்முடைய திருச்சபையாகவுந் தம்முடைய சொந்தச் சனங்களாகவுந் தெரிந்துகொண்டு தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து சம்பாதித்த இரட்சிப்பையடைய எல்லாரையுந் திருச்சபைக்கு வரவழைத்து விசுவாசிகளை இரட்சிப்பில் பங்காளிகளாக்கிக்கொள்ளுகிறது மிகவும் பெரிய ஆறுதலாம்.

௪௬௩. வினா. நாம் இதையறிந்து செய்யத்தக்கதென்ன.

விடை. ௧) நாம் திருச்சபையின் மெய் அவயவங்களாகும்படிக்குத் தேவவசனத்தைக் கவனமாய்க் கேட்டு வாசித்து ஞானத்திரவியங்களைச் சரியாய் அநுபவிக்கவேண்டும் (யோவா. ௰, ௨௭. ௨௮).

௨) நாம் திருச்சபையின் மெய் அவயவங்களாய்ப் பராபரனுக்கு மகிமையாக ஞான நடக்கையாய் நடக்கவேண்டும் (௧ பேது. ௨, ௯. ௰).

௩) நாம் பரிசுத்தவான்களின் ஐக்கியமுண்டென்று விசுவாசிக்கிறதற்கு அத்தாட்சியாக ஒருவருக்கொருவர் ஒரே கட்டாயிருக்கவேண்டும் (௧ யோவா. ௧, ௩; யோவா. ௰௭, ௨௰. ௨௩).

பாவமன்னிப்பைப்பற்றியது.

௪௬௪. வினா. திருச்சபையில் நமக்குக்கிடைக்கிற மகாப் பெரிய உபகாரமென்ன.

விடை. நமக்கு அதில் கிடைக்கிற மகாபெரிய உபகாரம் பாவமன்னிப்புத்தான். பாவம் எப்படிச்சகல பொல்

லாப்புகளுக்குள்ளே மகாப்பெரிய பொல்லாப்பாயிருக்கிறதோ அப்படிப பாவமன்னிப்பும் பராபரன் செய்கிற உபகாரங்களுக்குள் மகாப்பெரிய உபகாரமாயிருக்கிறது. இந்த உபகாரம் நமக்குக்கிடைக்காவிட்டால் மற்ற உபகாரங்களும் நமக்குக் கிடைக்காது.

௪௯௫. வினா. பாவங்களை மன்னிக்கக் கூடியவரார்.

விடை. நமது கர்த்தராகிய பராபரன் ஒருவர்மாத்திரம் பாவங்களை மன்னிக்கக்கூடியவர். ஆகையால் அவர் ஒருவரிடத்தில் மாத்திரம் பாவமன்னிப்பைத் தேடவேண்டும் மாற். ௨, ௭; எபேசி. ௧, ௭).

(௪௯௬. வினா. திருச்சபையிலுள்ள பராபரனுடைய உக்கிராணக்காரராகிய குருக்கள் பாவங்களை மன்னிக்கக்கூடாதோ.

விடை. பாவங்களை நிவாரணம்பண்ணின இயேசுகிறிஸ்து அவைகளை மன்னிக்கிறதற்கான அதிகாரத்தை இப்பூமியில் தமது திருச்சபைக்குக் கொடுத்தருளினார். இந்த அதிகாரத்தின்படி குருக்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறவர்களுக்குப் பாவமன்னிப்பையறிவிக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் வல்லமையினால் பாவங்களை மன்னிக்கிறார்களென்று சொல்லக்கூடாது. பராபரன் அவர்களைக்கொண்டு பாவங்களை மன்னிக்கிறாரென்று சொல்லவேண்டும் (யோவா. ௨௰, ௨௨. ௨௩).

௪௯௭. வினா. பராபரன் எந்த எத்தனங்களைக்கொண்டு பாவங்களை மன்னிக்கிறார்.

விடை. ௧) சுவிசேஷமும் (நடபடி ௨௬, ௰௭. ௰௮),
௨) ஞானஸ்நானமும் (நடபடி ௨, ௩௮),
௩) பரிசுத்த இராபபோசனமும் (மத். ௨௬, ௨௮)
ஆகிய எத்தனங்களைக்கொண்டு பாவங்களை மன்னிக்கிறார்.

௪௯௮. வினா. பாவமன்னிப்பு எங்கே அகப்படும்.

விடை. அது பூமியிலுள்ள திருச்சபையில் அகப்படுமே யொழிய திருச்சபைக்குப் புறம்பே யகப்படாது ஆகையால் திருச்சபையில் சேராதவர்கள் பாவமன்னிப்பையடையமாட்டார்கள்.

௪௯௯. வினா. பராபரன் ஆருடைய பாவங்களை மன்னிக்கிறார்.

விடை. அவர் சகல மனிதரின் பாவங்களையும் மன்னிக்கும்படி ஆயத்தமாயிருக்கிறார். ஆனால் தங்கள் பாவங்க

ளுக்காக மனஸ்தாபப்படுகிறவர்கள்மாத்திரம் பாவமன்னிப்புக்குப் பங்குள்ளவர்களாவார்கள் (நடபடி ௩, ௨௰).

௪௱௰. வினா. பராபரன் எந்தப்பாவங்களை மன்னிக்கிறார்.

விடை. அவர் சகல பாவங்களையும் மன்னிக்கிறார் (௧ யோவா. ௧, ௭; நடபடி ௰௩, ௩௮. ௩௯). பரிசுத்தஆவிக்கு விரோதமான பாவமாத்திரம் மன்னிக்கப்படாது (மத். ௰௨, ௩௨).

௪௱௧. வினா. பராபரன் நம்மிடத்தில் என்னத்தைப்பார்த்துப் பாவங்களை மன்னிக்கிறார்.

விடை. அவர் நம்மிடத்தில் மெய்யான விசுவாசத்தைப்பார்த்துப் பாவங்களை மன்னிக்கிறாரேயொழிய நமது கிரியைகளைப்பார்த்துப் பாவங்களை மன்னிக்கிறதில்லை. ஆனால் நமக்குப் பாவமன்னிப்பைப் பலிக்கப்பண்ணுகிற விசுவாசம் நற்கிரியைகளில்லாமலிருக்கக்கூடாது (ரோமர் ௩, ௨௮; ௪, ௨—௮; எபேசி. ௨, ௮—௰௧; ௨ பேது. ௧, ௩—௰௨).

௪௱௨. வினா. பராபரன் பாவங்களை எப்படி மன்னிக்கிறார்.

விடை. அவர் விசுவாசிகளுக்கு இனிப்பாவங்கள் பலிக்காதபடிக்கு இயேசுகிறிஸ்துவின் பரிபூரண நீதியை அவர்களுக்குப் பலிக்கப்பண்ணிப் பாவங்களை மன்னித்து அவைகளுக்காக வரவேண்டிய ஆக்கினைகளை நீக்கிப்போடுகிறார் (சங்கீ. ௩௨, ௧. ௨; ௨ கொரி. ௫, ௨௧; எசா. ௫௩, ௫).

௪௱௩. வினா. பராபரன் எத்தனை நாளைக்குப்பாவங்களை மன்னிக்கிறார்.

விடை. அவர் நமது பாவங்களை மன்னிக்கும்போது அவைகள் என்றென்றைக்கும் மன்னிக்கப்பட்டதாயிருக்கும்படிக்கு மன்னித்துவிடுகிறார் (எசேக். ௰௮, ௨௧. ௨௨; மீகா. ௭, ௰௮. ௰௯; எசா. ௫௪, ௰). ஆனால் அநேகர் ஒரு விசை யடைந்த தேவகிருபையைத் தங்கள் சுயகுற்றத்தினால் தங்களிடத்தில் அவத்தமாக்கி விசுவாசத்தைவிட்டுத் திரும்பவுந் தாறுமாறாய் நடக்கத்துவக்கித் தங்களுக்குப் பாவமன்னிப்பு செல்லாதபடிக்குப் பண்ணுகிறார்கள் (எசேக். ௰௮, ௨௪; மத். ௰௮, ௩௨—௩௫). நாம் எத்தனைநாள் மெய்விசுவாசத்தில் கிறிஸ்துவின் வசமாக நிலைத்திருக்கிறோமோ அத்தனை நாளும் நமக்குப்பாவமன்னிப்பு உண்டாயிருக்கும். நாம் எப்போது விசுவாசத்தைவிட்டுக் கிறிஸ்துவுக்கு விரோதமாக நடக்கத் துவக்குகிறோமோ அப்போது கிறிஸ்துவினால் முன்னடைந்த பாவமன்னிப்பைத்திரும்ப இழந்துபோகிறோம்.

௱எ௪. வினா. ஒருவன் ஒருவிசை பெற்ற பாவமன்னிப்பை அவத்தமாக்கிக் கிருபையைவிட்டுவிட்டுத் திரும்பப்பாவங்களில் விழுந்தால் இப்படிக்கொத்தவன் பூமியில் மறுபடியும் பாவமன்னிப்பைப் பெறுகிறதற்கு இடமுண்டா.

விடை. இப்படிக்கொத்தவன மெய்யாகவே தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டுத் தான் விட்டுவிட்ட உடன்படிக்கையில் திரும்ப உட்பட்டால் மறுபடியும் பாவமன்னிப்பைப் பெறுகிறதற்கு இடமுண்டு (௨ தீமோ. ௨, ௨௫. ௨௬; ௨ பேது. ௩, ௯; எசா. ௫௫, ௭).

௱எ௫. வினா. இந்த உபதேசத்தினால் நமக்கு வருகிற ஆறுதலென்ன.

விடை. இந்த உபதேசஞ் சகல ஆறுதல்களுக்கும் அஸ்திவாரமாயிருக்கிறது. பாவம் நமக்கும் பராபரனுக்கும் நடுவே சுவர்போலிருந்து நாம் நமது உன்னத நன்மையாகிய பராபரனண்டையில் சேரக்கூடாதபடிக்குத் தடைபண்ணும். ஆனால் நம்முடைய பாவம் மன்னிக்கப்பட்டால் நாம் நமது உன்னத நன்மையாகிய பராபரனண்டையில் சேர இடமுண்டாகும். ஆகையால் பாவமன்னிப்பு எங்கே இருக்கிறதோ அங்கே சீவனும் மோட்சமுமிருக்கும்.

௱எ௬. வினா. நாம் இதையறிந்து செய்யத்தக்கதென்ன.

விடை. ௧) பராபரன் நமது பாவங்களை எல்லாம் மன்னிக்கிற உபகாரத்தை மிகவும் பெரிய உபகாரமாக எண்ணிக்கொண்டு அதை இடைவிடாமல நமக்குப் பலிக்கபபண்ண வேண்டும் (௧ யோவா. ௧, ௭—௰).

௨) நாம் பெற்றுக்கொண்ட பாவமன்னிப்பை அவத்தமாக்காதபடிக்கு மன்னிக்கப்பட்ட பாவங்களை மறுபடியுஞ் செய்யாமல் எச்சரிக்கையோடு நடக்கவேண்டும் (௨ பேது. ௨, ௨௰—௨௨).

௩) பராபரன் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறது போல் நாமும் பிறத்தியாருடைய பாவங்களை மன்னிக்கவேண்டும் (மத். ௬, ௰௫).

மாமிச உயிர்த்தெழுதலைப்பற்றியது.

௱எஎ. வினா. விசுவாசப்பிரமாணத்தின் மூன்றாம் பிரிவின்படி நாம் பின்னும் விசுவாசிக்கிறதென்ன.

விடை. மாமிச உயிர்த்தெழுதலை விசுவாசிக்கிறோம்.

௪௭௮. வினா. மாமிச உயிர்த்தெழுதலாவதென்ன.

விடை. செத்துப்போன மனிதரெல்லாருந் திரும்ப உயிர்த்தெழுந்திருப்பதுதான் மாமிச உயிர்த்தெழுதல்.

௪௭௯. வினா. எப்போது எல்லாரும் உயிர்த்தெழுந்திருப்பார்கள்.

விடை. பொதுவான நியாயத்தீர்ப்பின்நாளில் எல்லாரும் உயிரோடெழுந்திருப்பார்கள். ஆனால் அந்தநாள் எப்போது வருமென்று ஒருவனுக்குந் தெரியாது (மாற். ௰௩, ௩௨.)

௪௮௰. வினா. மரித்தோரை எழுப்பப்போகிறவரார்.

விடை. பிதா குமாரன் பரிசுத்தஆவியாகிய திரியேக பராபரன் மரித்தோரை எழுப்புவார். பிதாவாகிய பராபரனிடத்தில் சீவனூற்றிருக்கிறது (சங்கீ. ௰௬, ௰; ௨ கொரிந். ௪, ௰௪; ௧ கொரிந். ௬, ௰௪). பிதா தம்மில் தாமே சீவனுடையவராயிருக்கிறதுபோல் குமாரனுந் தம்மில் தாமே சீவனுடையவராயிருக்குதலைக் கட்டளையிட்டார் (யோவா. ௫, ௨௬. ௨௮; ௬, ௪௰; அறிவி. ௧, ௰௭. ௰௮). நம்மில் வாசமாயிருக்கிற பரிசுத்தஆவியினாலே பிதாவிடத்திலுங் குமாரனிடத்திலுமிருக்கிற சீவன் நமக்குக்கிடைக்கும் (ரோமர் ௮, ௰௧).

௪௮௧. வினா. உயிரோடெழுந்திருப்பவர்களார்.

விடை. இப்பூமியில் உயிரோடிருந்து மரித்துப்போன நல்லவர்களும் பொல்லாதவர்களுமாகிய சகலரும் உயிரோடெழுந்திருப்பார்கள். நல்லவர்கள் நித்திய சீவனுக்கென்றும் பொல்லாதவர்கள் நித்திய ஆக்கினைக்கென்றும் உயிரோடெழுந்திருப்பார்கள் (தானி. ௰௨, ௨; யோவா. ௫, ௨௮. ௨௯).

௪௮௨. வினா. மரித்தவர்கள் உயிரோடெழுந்திருக்கும் விதமென்ன.

விடை. மனிதர் மரிக்கும்போது அவர்கள் ஆத்துமஞ் சரீரத்தைவிட்டு மோட்சத்திற்காவது நரகத்திற்காவது போகும் (அறிவி. ௰௪, ௰௩; லூக். ௰௬, ௨௨. ௨௩; நடபடி. ௧, ௨௫), சரீரமோ புதைக்கப்பட்டு மண்ணாய்ப்போகும் (௧ மோசே ௩, ௰௯; பிரசங். ௰௨, ௭). இப்படி மண்ணாய்ப்போன சரீரம் உயிர்ப்பிக்கப்பட்டு ஆத்துமத்தோடுகூடும் (யோவா. ௫, ௨௮. ௨௯; ரோமர் ௮, ௰௧; பிலிப். ௩, ௨௧). சரீரம் மாமிசமாயிருக்கிறபடியால் அது மாமிச உயிர்த்தெழுதலென்று சொல்லப்படும்.

௪௮௩. வினா. உயிரோடெழுந்திருக்குஞ் சரீரம் எவ்விதமாயிருக்கும்.